பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 19 சனிக்கிழமை (04-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:251

# இலங்கை விடயங்களில் தலையிடாத போக்கிலிருந்து மாறுகிறது இந்தியா!

## புலிகளுடன் பேசுமாறு அரசுக்கு வற்புறுத்தல்

கொழும்பு,ஓகஸ்ட் 4

**இலங்கையில் ஆள்புல ஒருமைப்பாட்டை அங்கீகரிக்கும் தனது பரந்த இணக்கப்பாட்டுக்கு மத்தியிலும் -**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசின் கடும்போக்கு நிலைப்பாட்டுக்கு ஆதரவான - இலங்கையின் விவகாரங்களில் தலையிடாத - தனது கொள்கையிலிருந்து இந்தியா விலகிச் செல்வதாகத் தெரிகின்றது. 'த இந்து' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.**

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலை இந்தியா கண்டிக்காதது அதன் தற்போதைய நிலைப்பாட்டின் காரணமே.

இந்தத் தாக்குதல் குறித்து இந்தியா வெறுமனே 'கவலையும் ஏமாற்றமும்' மட்டுமே தெரிவித்தது. அத்தோடு இந்தச் சாக்கில் அரசையும் புலிகளையும் பேச்சை மீள ஆரம்பிக்கும் படியும் இந்தியா வற்புறுத்தியது - என்று 'த இந்து' நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது. அப்பத்திரிகை இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான மனுக்கள் மீதான தீர்ப்பு 10ஆம் திகதி

கொழும்பு,ஓக.4

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தள்ளுபடி செய்யக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 13 மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று முன்தினம்வரை - தொடர்ந்து 3 தினங்கள் - நடைபெற்றிருந்தன.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றன.

விசாரணைகள் முடிவுற்ற நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., ரெலோ ஆகிய கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் தனிப்பட்டவர்கள் சார்பில் மொத்தம் 13 மனுக்கள் தாக்கலாகி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் கடும் கடற்சமர்

கொழும்பு,ஓக.4

முல்லைத்தீவு சாலைக் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ரோந்து சென்ற கடற்படையினர் விடுதலைப் புலிகளின் சுமார் 12 படகுகளை அவதானித்து அந்தப் படகுகள் மீது தாக்குதல் தொடுத்ததை அடுத்து சமர் வெடித்தது என்றும் -

கடுமையான மோதல்களைத் தொடர்ந்து கடற்புலிகள் பலத்த சேதத்துடன் பின் வாங்கிவிட்டனர் என்றும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும் இந்த மோதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் நேற்றிரவுவரை எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. (க-3)

## ஆங்கில வாரப்பத்திரிகை நிறுத்தம்

கொழும்பு,ஓக.4

எக்பிரஸ் நியூஸ் பேப்பர் லிமிட்டெட்டின் சனிக்கிழமை வார வெளியீடான "வீக்கெண்ட எக்ஸ்பிரஸ்" பத்திரிகை இன்றுடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1995 டிசெம்பர் மாதம் தொடக்கம் கடந்த ஐந்தரை ஆண்டு காலம் இப்பத்திரிகை வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 6 மாதச் சம்பளத்தை வழங்கி அவர்களை பணியில் இருந்து நிறுவனம் நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## மற்றொரு தாக்குதலுக்கு அரச படைகள் முஸ்தீபு?

கொழும்பு,ஓக.4

விடுதலைப் புலிகள் மீது மற்றொரு பெரும் தாக்குதலுக்கு அரசுப் படைகள் தயாராகிவருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இத்தாக்குதலுக்கான விசேட - கடுமையான - பயிற்சிகள் இராணுவப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் -

தாக்குதலுக்கான புதிய உத்திகள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

நிலப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதைவிட அதிக எண்ணிக்கையில் மக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் புதிய உத்தியைப் புலிகள் பின்பற்றுகிறார்கள் என்பதை இராணுவம் இப்போது ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

"பெரிய நடவடிக்கைகளில் நிலப் பிரதேசங்களைக் கைப்பற்றுவது தந்திரோபாய நிலையில் சாதகமான

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மீதான நம்பிக்கை குறைகிறது என்கிறார் தொண்டமான்

கொழும்பு,ஓக.4

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எமது கட்சி விடுத்துள்ள கோரிக்கைகளை அரசு தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை குறைந்துகொண்டே போகிறது. எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்தவிருக்கின்றேன்.

இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்துவது என்பது அவர்களுடன் இணைவது என்று அர்த்தம் அல்ல. எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து ஐ.தே.கவிடம் எடுத்துக் கூறி அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்றுக் கைதான இளைஞன் சடலமாக ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் "சயனைட்" உட்கொண்டு உயிரிழந்ததாகத் தெரிவித்து அவரின் சடலத்தை நேற்று யாழ். பொலீஸார் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கொக்குவில் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் குறிப்பிட்ட இளைஞனைப் படையினர் கைது செய்து யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் -

அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் அந்த இளைஞன் 'சயனைட்' உட்கொண்டு உயிரிழந்ததாகவும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலமே வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்தின் வாய்ப்பகுதியில் சிறு காயம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-6-9-15)

## இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதை உலகநாடுகள் உடன் நிறுத்த வேண்டும்

### அமெ. தூதரக அதிகாரியிடம் ரெலோ குழு கோரிக்கை

கொழும்பு,ஓக.4

இலங்கைக்கு ஆயுத தளபாடங்கள் வழங்குவதை அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய உலக நாடுகள் உடனடியாக நிறுத்தவேண்டும்.

ரெலோ அமைப்பின் தூதுக்குழு ஒன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரியை நேற்றுச் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தது.

ரெலோ அமைப்பின் தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் சென்ற இந்தக் குழுவினர், இலங்கை அரசு சமாதானம் என்று கூறிக்கொண்டு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் படைக்கு ஆள் சேர்ப்பதிலும் தவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்றும் -

இதனை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய உலக நாடுகள் இலங்கை அரசுக்குத் தாராளமாக ஆயுதங்களை வழங்கி வருகின்றன என்றும் -

இந்நிலையானது யுத்தநிலை நீடிப்பதற்குக் காரணமாக அமைந்து வருகின்றது என்றும் -

அமெரிக்க அதிகாரியிடம் ரெலோ குழுவினர் எடுத்துக் கூறினர்.

உலகநாடுகள் ஆயுதம் வழங்குவதை நிறுத்தும்வரை இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்றும் குழுவினர் எடுத்துக் கூறினர்.

இந்தக் குழுவில் ரெலோ அமைப்பின் பேச்சாளர் அப்பூசுப்பும் இடம் பெற்றிருந்தார். (க-7)

## அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதானோரை எந்தச் சட்டத்தின்கீழ் தடுத்து வைத்துள்ளீர்கள்?

### வவுனியா பொலீஸாரிடம் நீதிபதி இளஞ்செழியன் கேள்வி

வவுனியா,ஓக.4

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களை அந்தச் சட்டம் காலாவதியான பின்னரும் எந்தச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைத்திருந்தீர்கள்?

இது குறித்து பூரண அறிக்கை சமர்பிக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் குற்றத் தடுப்புப் பொலீஸாரை நேற்றுப் பணித்தார்.

வவுனியாவில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 21 பேர் தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எம்.இளஞ்செழியன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன் போது சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். சிற்றம்பலம், அவசரகாலச் சட்டம் காலாவதியாக்கப்பட்ட கடந்த 4ஆம் திகதி தொடக்கம் ஜனாதிபதி புதிய பாதுகாப்பு ஒழுங்கு விதிகளைப் பிரகடனம் செய்த 19ஆம் திகதி வரையான இரண்டு வாரங்களில் சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தது சட்டத்துக்கு முரணானது என்றும் -

ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய சட்டவிதிகள் நாடாளுமன்றில் அங்கீகாரம் பெறப்படாத நிலையில் சட்டவலுவற்ற ஒழுங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இலங்கையின் இறைமைக்கு விரைவில் இறுதிச் சவால்!

## வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.4

இலங்கை அதன் இறைமை தொடர்பான இறுதிச்சவாலை வெகு விரைவில் எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என உலகப் புகழ் பெற்ற புகைப்படப் பிடிப்பாளரும் பத்திரிகையாளருமான போல் ஹரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான தனது புகைப்படத் தொகுப்பை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1983 இற்குப் பின்னர் இலங்கை மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு இதுவரை 18 தடவைகளுக்கு மேல் விஜயம் மேற்கொண்டுள்ளேன். ஒவ்வொரு முறையும் விஜயம் மேற்கொள்ளும் போதும் எனது சொந்த நாட்டிற்கு விஜயம் செய்தது போலவே உணர்ந்துள்ளேன். இது சில நாடுகளுக்குரிய தனித்துவமான அம்சம்.

1996 இல் ஒருமுறை இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் லண்டனில் புலிகளின் தலைவர் ஒருவரைச் சந்தித்து கொழும்பில் பாதுகாப்பான இடம் எதுவென ஆலோசனையும் கேட்டுள்ளேன்.

எனது ஒவ்வொரு விஜயத்தின் போதும் இலங்கையில் பெரிய தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இதன் காரணமாக ஒருமுறை பிரிட்டனிற்கான இலங்கைத் தூதுவர் எனக்கு இலங்கைக்கு 'விஸா' தருவது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது என வேடிக்கையாகக் கூறினார்.

இலங்கை எனக்கு பலவகை உணர்வுகளைத் தந்துள்ளது. முரண்பாடுகள் நிறைந்த நாடாக இது காணப்படுகிறது. அழகும் பயங்கரமும் ஒருங்கே கொண்ட நாடு இலங்கை.

1983 இற்குப் பின்னர் மிகவும் நெருக்கடியானதொரு கட்டத்தில் இலங்கை உள்ளது. மிகச் சமீபத்திய சம்பவங்கள் இலங்கை குறித்து மோசமான அபிப்பிராயத்தை உருவாக்கியுள்ளன. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியிலும் காணப்படும் நிச்சயமற்ற தன்மை இலங்கை குறித்து நம்பிக்கையில்லா சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தற்போது நாடு மிகவும் கடினமான சவால் ஒன்றை எதிர் கொண்டுள்ளது. வெகுவிரைவில் இறுதியான சவாலை எதிர்கொள்ள நேரிடும். இலங்கையின் இறைமை காப்பாற்றப்படுமா? தாக்குப் பிடிக்குமா? என்ற பரீட்சையாக அது அமையும்.

வரலாற்றில் இக்காலம் மிக முக்கியமானதாக இடம்பிடிக்கப்போகிறது. இலங்கையின் தலைவிதி 2001 ஆம் ஆண்டின் கோடையின் பிற்காலப் பகுதியிலேயே முக்கிய மாற்றத்தைக் காணப்போகின்றது.

இது எனது யுத்தமல்ல. எனது நாட்டின் யுத்தமும் அல்ல. நான் எனது கடைமையை நேர்மையாகவும், பக்கச் சார்பின்றியுமே செய்துள்ளேன். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு பொருத்தமானது என என்னால் சொல்ல முடியாது. எனினும், மனோநிலைகளில் பாரிய மாற்றம் தேவை. நாட்டின் எதிர்காலமே கேள்விக் குறியாக உள்ளது என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும். எனது இந்தப் புத்தகத்தின் மூலம் உங்களை வந்தடையும் உருவங்கள் விவாதங்களுக்கு வித்திட்டு சிறிய மனமாற்றத்தையாவது உருவாக்கும் என நம்புகின்றேன் - எனத் தெரிவித்தார்.

### பிரட்மன் வீரக்கோன்

இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இலங்கையில் காணப்படும் இரட்டைத் தன்மைகள் குறித்துப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். எப்படி நாங்கள் சாந்தமும், மிருகத்தனமும் கலந்தவராக உள்ளோம் எனும் கேள்வி எழுகின்றது. உலகின் பல நாடுகளில் இந்நிலை இருக்கக்கூடும். எனினும், இலங்கையில் இந்த அம்சம் தனித்துவமானதாகக் காணப்படுகின்றது - என்றார்.

(ஐ)

---

### நியூயோர்க் செல்லும் வேளையில்

# அமெ. ஜனாதிபதியை சந்திக்க சந்திரிகா தீவிர முயற்சி

கொழும்பு,ஓக.4

நியூயோர்க்கில் சில வாரங்களில் நடைபெறவுள்ள 'யுனிசெவ்' மாநாட்டில் பங்குபற்றச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்க தீவிரமாக முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி புஷ்ஷைச் சந்திக்கத் தனக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதி சந்திரிகா அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்குக் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மூலம் இது சம்பந்தமான கடிதம் கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

பாகிஸ்தான் ஜனாதிபதியின் விசேட தூதுவராக முன்னாள் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் கடந்த சில தினங்களுக்கு முன் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துள்ளார்.

பாகிஸ்தானின் விசேட தூதுவர் இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் கலந்துரையாடியதாக சிங்கள நாளிதழான 'லங்காதீப' குறிப்பிட்டுள்ளது.

(க)

---

# அந்தணர்கள் தம் குருவிடம் வேதம் கற்கும் 'உபகர்மம்'

**'நியந்த்ரீ' நடத்தும் யஜுர் வேத உபகர்ம நிகழ்வு குடா நாட்டிலுள்ள எட்டு இந்து ஆலயங்களில் இன்று நடைபெறுகின்றது. 'உபகர்மம்' பற்றிய சிறு விளக்கம் இது.**

வேதம் அனாதியானது. அவ்வேதத்தைக் கற்றுக்கொள்ளத் தகுதியுடையோர் இருபிறப்பாளர், வேதியர் எனச் சுட்டப்படும் அந்தணர்கள். அவர்கள் உரிய வயதில் பரமேஸ்வரனுக்கு மகிழ்வளிப்பதற்காக பக்தியுடனும்; சுருதிகளில் கூறப்பட்டதும், ஸ்மிருதி வழியே நடைமுறைப்படுத்தப்பட்டதும், நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்வதற்கு தகுதிப்பாட்டை அளிப்பது எனும் காம உணர்வுடனும், பிரம்ம ஒளி வளர்ச்சியடைவதன் பொருட்டு எனும் ஞானத்துடனும் ஒன்றுசேர 'பரிசுத்திக் கூடியவற்றுள் சிறந்ததும், ஆதியில் பிரம்மா தோன்றும்போதே அவருடன் தோன்றியதும், ஆயுளையும் முதன்மையையும் அளிக்கவல்லதுமாகிய ஞான ஒளி, பலம் இதனால் நிலைபெறவேண்டும் என 'வெண்மையான பூணூலைத் தரிக்கின்றேன்' எனும் பொருளுடைய வேதமந்திரத்தைக் கூறி யஞ்ஞோபவீததாரணம் செய்து கொள்வதுடன் வேதங்களின் தாயான காயத்ரீ தேவியின் மந்திர உபதேசமும் குருவின் உபதேசத்தினால் பெறப்படுகின்றது. இது முதலாக காயத்ரீ தேவியை சந்தியாவந்தனம், சமிதாதானம், ஜபம் முதலான கர்மானுஷ்டானங்களால் தினமும் உபாசித்து வேத மந்திரங்களைக் குருவிடம் இருந்து கற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவனாகின்றான். அத்தகைய பிரம்மசாரிகள் வேதம் கற்க ஆரம்பிக்கும் நாளே உபாகர்மம் ஆகும். இதனையே ஆவணி அவிட்டம், சிராவணம் என்று அழைப்பர்.

யஜுர் வேதத்தைச் சார்ந்த அந்தணர்கள் தமது நித்திய கர்மானுஷ்டங்களுடன் தமது குருவை நாடி புனிதமான ஆலயத்தில் ஒன்று கூடி ஸ்நானம் செய்து காமோகார்ஷீத், ஜபம் செய்து பிரம்மயஞ்ஞம், மகா சங்கல்பம் யஞ்ஞோபவீததாரணம், தர்ப்பணம், ஹோமம் ஆகியவைகளைக் குருவின் வழிகாட்டலில் செய்து வேதத்தைக் கற்க ஆரம்பிப்பர். இந்நிகழ்வு அனைத்து புண்ணிய ஸ்தலங்களிலும் அந்தணர்களால் பின்பற்றப்படும். நியந்த்ரீ ஒழுங்கு செய்துள்ள உபாகர்மம் நல்லூர் சிவன் கோயிலில் இன்று காலை இடம்பெறுகின்றது.

தொன்மையான மரபும் கருத்தாழமும் மிக்க வைதிகப் பாரம்பரியமான வேதாரம்பம் எனும் கர்மாவிற்குரிய சிறப்பினையும், உள்ளார்ந்த கருத்துக்களையும் மக்கள் உணர்ந்து வைதிகசைவம் மேலோங்க அதன் வழியே ஒவ்வொரு கர்மாவையும் மக்கள் உணர்ந்து கொள்வார்களாக!

*'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

*-நியந்த்ரீ.*

---

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.4

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் பொதுச் செயலாளர் இன்பம் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் 'உழைக்கும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் தொழிற்சங்க நடைமுறையும்' என்ற கருப்பொருளில் யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல்துறை விரிவுரையாளர் கே.கணேசலிங்கம் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

(ஐ-6-4)

## சனசமூக நிலையங்களுக்கு 'ரீ.வி'க்கள்

கோண்டாவில்,ஓக.4

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சனசமூக நிலையங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப பணிமனை கேட்போர் கூடத்தில் சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி சம்பந்தமான கலந்துரையாடலின் போது பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் இதனைத் தெரிவித்தார்.

பிரதேச சபைக்கு உட்பட்ட 42 சனசமூக நிலையங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படவுள்ளன.

(க-86)

## அனலைதீவுக்கு புதிய பஸ்

காரைநகர்,ஓக.4

அனலைதீவுப் பகுதிக்கு புதிய பஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து புதிய பஸ் சேவையை கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இப்பகுதிக்கு முதற் தடவையாக வழங்கப்பட்ட இந்தப் பஸ்ஸினால் இதுவரை காலமும் உள்ளூரில் போக்குவரத்து செய்வதில் மக்கள் எதிர்நோக்கிய சிரமங்கள் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-73)

---

# காரைநகர்ப் பகுதிக்கு விரைவில் மின்வசதி

காரைநகர்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இலங்கை மின்சாரசபை மேற்கொண்டு வருகின்றது.

மின்சார சபையினால் மின்கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பிற்கான அனைத்து வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் பொதுமக்களிடம் மின்சாரம் பெறுவதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

மின்சாரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை காரைநகர் வடக்கு பிரதேச சபை உப அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான ந. மதனராஜாவின் ஏற்பாட்டில் புதிய ஜெனரேற்றர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-73)

# 'பாதுகாவலன்' ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.4

இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க வார ஏடான 'பாதுகாவலன்' பத்திரிகையின் 125ஆவது ஆண்டு விழாவும் மலர் வெளியீட்டு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகமும் சிறப்பு விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் அதி வண. எஸ்.ஜெபநேசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார்.

மலர் வெளியீட்டுக்கான ஆசியுரையை யாழ்.மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜே.பி.ஈ. செல்வராஜாவும், யாழ்.ஆயரும் நிகழ்த்துவர்.

'பாதுகாவலன்' ஆண்டு விழா நூலின் முதற்பிரதியை யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் யாழ்.மறைக்கோட்ட குரு முதல்வர் ஜே.பி.ஈ.செல்வராஜாவிடம் வழங்குவார்.

நூலின் ஆய்வுரையைத் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் அதி வண. எஸ்.ஜெபநேசன் நிகழ்த்தவுள்ளார்.

(ஐ-6)

### நீதிமன்றத்தின் உத்தரவின்றி

# 14 புலிகளின் சடலங்களையும் எவரிடமும் கையளிக்காதீர்!

## நீர்கொழும்பு நீதிவான் உத்தரவு

கொழும்பு,ஓக.4

கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனக் கூறப்படும் 14 பேரின் சடலங்களையும் நீதிமன்ற உத்தரவின்றி எவரிடமும் கையளிக்க வேண்டாம் என்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தாக்குதலில் உயிரிழந்தோர் தொடர்பான விசாரணை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எம்.என். புஷான் முன்னிலையில் கடந்த ஏழாம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற சமயமே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தாக்குதலில் உயிரிழந்த 14 புலிகளின் சடலங்களும் இன்னமும் அடையாளம் காணப்படாத நிலையில் ராகம ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன என்றும் -

இந்தச் சடலங்களை நீதிமன்ற உத்தரவின்றி எவரிடமும் ஒப்படைக்க வேண்டாம் என்றும் -

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் புலனாய்வுப் பொலீஸ் பிரிவு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சிசில் மெண்டிஸ் நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து பிரஸ்தாப சடலங்களை நீதிமன்றத்தின் உத்தரவின்றி எவரிடமும் ஒப்படைக்க வேண்டாம் என்று நீதிவான் ராகம ஆஸ்பத்திரி அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(க-3)

## வடபிராந்திய போக்குவரத்து ஊழியர் கவலை

வலி.வடக்கு,ஓக.4

வடபிராந்திய போகுவரத்துச் சபையில் யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு, கடந்த இரண்டு வருடங்களுக்கான இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

1998ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு கூட ஒரு சிலரின் முயற்சியினாலேயே வழங்கப்பட்டதாகவும் தொழிற்சங்கங்கள் செயற்படாமையால் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை உள்ளதாகவும் ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

(க-86)


# இதய அஞ்சலி

எங்கள் தேவஸ்தானத்திற்கு ஒவ்வொரு மாதப்பிறப்புக்கும்,
வருடந்தோறும் நடைபெறுகின்ற திருவிழாக்களுக்கும்
வருகை தந்து தன் கான ஓசையைச் சிறப்புடன் பொழிந்து
எம்பெருமானையும், எம்பெருமாட்டியையும்,
பக்த அடியார்களையும் இசையில் திளைக்கவைத்த
இசைச் சக்கரவர்த்தி, நாதஸ்வர வித்துவான்

## அமரர் N.K.கணேசன்

அவர்களின் மறைவு கேட்டு மிகவும் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். இவருடைய இழப்பு காரைமண்ணுக்கும், மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி

*சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர தேவஸ்தானம் (உப சிதம்பரம்)*
ஆதீன கர்த்தாக்கள்
திருமதி தையல்நாயகி சிவஞானம்
திரு. சி. சிவபாலன் (லண்டன்)
திரு. சி. சிவநேசன்

*பொன்னம்பலம் வீதி, காரைநகர்.*

(90825)

# பலஸ்தீனர்கள் மீது நடத்தும் தாக்குதலை நிறுத்தமுடியாது

## இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவிப்பு

பலஸ்தீனர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த அறிவிப்பை அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் கண்டித்துள்ளன. இந்தக் கண்டனங்களுக்கு இஸ்ரேல் உடனடியாகப் பதிலடி கொடுத்துள்ளது.

தனது பிரஜைகளைப் பாதுகாப்பது தனது பொறுப்பு என்று அமெரிக்கா கருதுவது போன்று இஸ்ரேலுக்கும் தனது பிரஜைகளைப் பாதுகாக்கும் கடமை உண்டு என்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய உளவுத் துறை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் -

தீவிரவாதிகளின் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் அவர்கள் தாக்குவதற்கு முன் அவர்கள் மீது நாம் தாக்குதல் நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை -

மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையேயான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

மேற்குக் கரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார். வேறோர் இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 3 பலஸ்தீனர்கள் காயமடந்தனர். (ம-7)

## லண்டனில் குண்டு வெடிப்பு

லண்டன்,ஓக.4

லண்டனின் மேற்கு நகர் ஒன்றில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது. ஒருவர் காயமடைந்தார். பல லட்சம் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

பாடசாலை ஒன்றுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

குண்டுவெடிப்புக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்தும் இதுவரை எதுவும் தெரியவரவில்லை என்று பொலீஸார் கூறினர்.

# தலாய்லாமாவுடன் பேச்சு நடத்த சீனாவுக்கு அமெரிக்கா வலியுறுத்து

வாஷிங்ரன்,ஓக.4

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று சீன அரசை அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹொலின் பவல் அமெரிக்காவின் இந்த வற்புறுத்தலை சீனத் தலைவர்களிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

ஹொலின் பவலின் இந்த விஜயத்தின் போது திபெத் விவகாரம், சீனாவில் மனித உரிமைகள் தொடர்பான விவகாரம் என்பன குறித்தும் இரு தரபபுக்களும் ஆராய்ந்தன.

அமெரிக்க மக்கள் இந்த விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதாலும் சீன - அமெரிக்க உறவில் இவை முக்கிய செல்வாக்குச் செலுத்துவதாலும் இந்த விடயங்களில் சனா அதிக அக்கறை செலுத்த வேணடியது அவசியம் என்று ஹொலின் பவல் சீனத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் அமெரிக்கா சென்ற தலாய்லாமா அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை சந்தித்துப் பேசி இருந்தார். இதனை, திபெத்தியத் தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது என்று சீனா கண்டித்திருந்தது. (ம-7)

# ஆயிரக்கணக்கான தேள்களுடன் கண்ணாடிக் கூண்டுக்குள் பெண்!

## முப்பது நாள்கள் தங்கி வாழ்ந்து சாதனை



மெலேனா தனது ஆசைக்குரிய 'பொப்' தேளுடன்.

கோலாம்பூர்,ஓக.4

மலேசியாவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் ஆயிரக்கணக்கான கருந்தேள்களுடன் கண்ணாடிக் கூண்டுக்குள் 30 நாள்கள் தங்கி இருந்து சாதனை படைத்துள்ளார்.

நோர் மெலேனா ஹஸான் (வயது 24) என்ற பெண்ணே இந்தத் துணிச்சல்மிகு சாதனையைப் புரிந்துள்ளார்.

சுமார் 2ஆயிரம் தேள்கள் அடைக்கப்பட்ட கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்தவாறு இவா தனது சாதனையை ஆரம்பித்தார். ஒரு நாளில் 15நிமிடங்கள் தவிர்ந்த ஏனைய நேரம் முழுவதும் அவர் அந்தக் கூண்டுக்குள்ளேயே இருந்து வந்தார்.

இவர் இந்தச் சாதனையை ஆரம்பித்த 19ஆவது நாளின் பின்னர் கண்ணாடிக் கூண்டுக்குள் மேலும் 700 கருந்தேள்கள் விடப்பட்டன.

தேள்களுடன் இருந்த இந்த முப்பது நாள்களில் 7 தடவைகள் மெலேனாவுக்கு தேள்கள் கொட்டியுள்ளன. இவற்றில் இரண்டு தடவைகள் அவர் தேள்களின் கடும் தாக்குதலுக்கு இலக்கானார். எனினும் அவற்றால் அவருக்கு தீங்கு எதுவும் நிகழவில்லை. இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு அவர் தனது சாதனையை நிறைவேற்றியுள்ளார்.

இவரது இந்தச் சாதனை மலேசிய சாதனைப் பரவுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

சாதனை நிலைநாட்டிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மெலேனா, "எனது இலக்கை வெற்றிகரமாக அடைந்ததையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எனினும் தேள்களை விட்டுப் பிரிந்து செல்வது கவலையளிக்கின்றது" - என்றார்.

இந்தச் சாதனையை அடுத்து மெலேனாவுக்குத் 'தேள்களின் ராணி' என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

"தேள்களுடன் இருந்த காலத்தில் நான் இரண்டு தேள்களை மிகவும் விரும்பினேன் அவற்றில் ஒன்றுக்கு 'பொப்' என்று செல்லப் பெயரும் இட்டுள்ளேன்.

"தேள்கள் உங்களுக்கு நண்பர்களாக வேண்டும் என்றால் நீங்கள் அவற்றுடன் நீண்ட காலம் அன்பாக பழகவேண்டும். அப்போதுதான் நீங்கள் அவற்றின் நம்பிக்கைக்குரியவர்கள் ஆக முடியும்" - என்றார் தேள்களின் ராணி.

மெலேனா விரும்பிய 'பொப்' என்ற தேள் அவரது செல்லப்பிராணியாக அவருக்கே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய தேள்கள் வனப் பிரதேசத்தில் கொண்டு சென்று விடப்பட்டுள்ளன.

பாம்புகளுடன் உள்ளரங்க நிகழ்ச்சிகள் நடத்துவதை மெலேனாவின் தொழில். "ஒரு வார விடுமுறையின் பின் பாம்புகளுடனான எனது வழமையான நிகழ்ச்சிக்கு திரும்பி விடுவேன்" என்றார் மெலேனா.

இதேவேளை -

கடந்த ஆண்டு மலேசியப் பெண் ஒருவர் பாம்புகள் அடைக்கப்பட்ட கூண்டுக்குள் 31 நாள்கள் தொடர்ந்து இருந்து சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



தேள்களுடன் மெலேனா

## யஸீர் அரபாத் இத்தாலிக்கு விஜயம்

றோம்,ஓக.4

பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத் இத்தாலிக்கு விஜயம் செய்துள்ளார்.

போப் பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மற்றும் இத்தாலிய புதிய பிரதமர் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசி உள்ளார்.

இத்தாலியப் பிரதமரை அரபாத் சந்தித்துப் பேசிய சமயம் பிரதமர் அலுவலகத்துக்கு வெளியே 50க்கும் அதிகமானோர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். பலஸ்தீன நீதிமன்றத்தால் தகவல் கொடுப்போர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டவர்களின் தண்டனை ரத்துச் செய்யப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். (ம-7)

## மலேசியாவில் பெண்களுக்கு சமஉரிமை

கோலாலம்பூர்,ஓக.4

ஆண்,பெண் பாகுபாட்டை நீக்கி பெண்களுக்கு சமஉரிமை அளிக்கும் பிரேரணை ஒன்று மலேசிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தின் 8 ஆவது பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த முக்கிய திருத்தத்தின் மூலம் இனிமேல் வேலைவாய்ப்பு, தேர்தல்களில் போட்டியிடுதல் என்பவற்றில் பெண்களுக்கும் சமஉரிமை வழங்கப்படும்.

## ரஷ்யாவிடம் ஏவுகணை வாங்க இந்தியா திட்டம்

நியூயோர்க்,ஓக.4

சுயபாதுகாப்பு ஏவுகணை முறைகளை உருவாக்க இந்தியா ரஷ்யாவின் உதவியைப் பெற்றுக்கொள்ள இருப்பதாக அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பாதுகாப்பு இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஏவுகணைகளால் ஏற்படக்கூடிய அபாயத்தைச் சமாளிக்கவே இந்த நடவடிக்கை எனவும் -

ரஷ்யாவிடம் இருந்து மூவாயிரம் ஏவுகணைகளை வாங்கும் ஒப்பந்தத்தில் அடுத்தமாதம் மொஸ்கோ செல்லவுள்ள இந்தியப் பிரதமர் கையெழுத்திடுவார் என்றும் -

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நேபாளத்தில் நிலச்சரிவில் சிக்கி 174 பேர் பலி!

காத்மண்டு,ஓக.4

நேபாளத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கடும் பருவமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு என்பனவற்றில் சிக்கி 174 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 39 பேர் காயமடைந்தனர். வெள்ளம் காரணமாக ஆயிரத்து 396 குடும்பங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## பணயக்கைதிகள் கொல்லப்பட்டனர்

மணிலா,ஓக.4

தாம் பிடித்துச் சென்ற 21 பணயக் கைதிகளில் நால்வரை அபு செயுப் தீவிரவாதிகள் கொலை செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் தலை துண்டாடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# இன்ரநெற்றில் புதிய வைரஸ்

இன்ரநெற்றில் புதியவகை வைரஸ் ஒன்று பரவி வருவதாக அமெரிக்க கணனி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

'கோட்ரெட்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வைரஸ் அமெரிக்காவில் மட்டும் ஒரு லட்சம் கணனிகளைச் செயலிழக்கச் செய்துள்ளது.

இந்த வைரஸ்கள் பெருமளவில் கணனிகள் பயன்படுத்தப்படும் நிறுவனங்களில் உள்ள கணனிகளையே தாக்கி வருவதாகத் தெரிவிக்கும் நிபுணர்கள் வீடுகளில் தனிப்பட்ட பாவனையில் உள்ள கணனிகளை இந்த வைரஸ் கண்டுகொள்வதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த வைரஸ் இதுவரை உலகம் முழுவதிலும் பல லட்சம் கணனிகளைச் செயலிழக்கச் செய்துள்ளன. (ம-7)

## பிஜிமோரியை கைது செய்ய பிடிவிறாந்து

பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அல்பேட்டோ பிஜிமோரியைக் கைது செய்யுமாறு அந்தநாட்டு அரசு சர்வதேச பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிஜிமோரி சர்வாதிகாரப்போக்குடன் செயற்பட்டதை அடுத்து இராணுவத்தால் பதவி கவிழ்க்கப்பட்டார். பதவி கவிழ்க்கப்பட்டதும் அவர் ஜப்பானுக்குத் தப்பியோடினார்.

தற்போது பிஜிமோரி ஜப்பானிலேயே தங்கியுள்ளார். எனினும் அவர் ஜப்பானின் பிரஜை என்ற காரணத்தால் அவரை பெருவுக்குத் திருப்பி அனுப்ப முடியாது என்று ஜப்பானிய அரசு தெரிவித்துள்ளது.

பிஜிமோரிக்கு எதிராகப் பெரு நீதிமன்றங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்தியா - பிரான்ஸ் பேச்சு

அமெரிக்காவின் புதிய ஏவுகணை எதிர்ப்பாயுதத் திட்டம் குறித்து ஆராய இந்தியாவும் பிரான்ஸும் இணங்கி உள்ளன.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்திய - பிரான்ஸ் பாதுகாப்புப் பேச்சில் இந்த விடயம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

அமெரிக்காவின் இந்தத் திட்டம் ஏனைய நாடுகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அது குறித்து விரிவாக ஆராய்வது என்றும் இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன.

# இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் ஜெயலலிதாவுக்குப் பெரும் கலக்கம்

புதுடில்லி,ஓக.4

இந்திய உச்ச நீதிமன்றம் ஒன்று நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பு, அதில் சம்பந்தமில்லாதபோதும் தமிழக முதல்வர் ஜெயலிதாவுக்கு கலக்கமூட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று, மேல் முறையீட்டில் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அரச வங்கி ஊழியர் பதவியில் நீடிப்பது தொடர்பான விசாரணையில் நேற்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட அரசு ஊழியர் மேல் நீதிமன்றத்தால் தண்டனை நீடிக்கப்பட்டால் மட்டுமே அரசுப் பணியில் இருக்கமுடியும் என்று அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்குக்கும் ஜெயலலிதாவுக்கும் சம்பந்தமில்லை ஆனாலும், ஊழல் வழக்குகளில் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதல்வர் பதவியில் நீடிப்பதற்கு தடை விதிக்கும்படி கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பல மனுக்கள் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளன.

குறிப்பிட்ட வங்கி ஊழியரைப் போன்றே, ஜெயலலிதாவும், தண்டனை விதிக்கப்பட்டு, மேல் முறையீட்டில் தண்டனை இடை நிறுத்தி வைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஊதுவர்த்திப் புகையால் புற்றுநோய் ஏற்படுமாம்

## ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு

தாய்பேய்,ஓக.4

ஊதுவர்த்திகளை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதன் மூலம் புற்றுநோய் ஏற்படும் என்று ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாய்வான் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆய்வு மூலமே இது கண்டுபிடிக்கப்பட்டது. தாய்பேய் கோயிலைமையமாக வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஊதுவர்த்தியில் இருந்து வெளியாகும் ஒரு வகை இரசாயனப் பொருளே புற்றுநோய்க்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரசாயனப் பொருள் மூச்சுத் திணறலை ஏற்படுத்துவதுடன், நுரையீரல் புற்றுநோயையும் ஏற்படுத்துகின்றது.

ஆலயங்களில் அதிகளவில் ஊதுவர்த்திகள் பயன்படுத்தப்படுவதால் அங்கு பணியாற்றுபவர்களுக்கும் வழிபட வரும் பக்தர்களுக்கும் புற்றுநோய் ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதாகவும் ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கருணாநிதி கைது விவகாரம் மக்களவையிலும் எதிரொலிப்பு

புதுடில்லி,ஓக4

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான மு.கருணாநிதி கடந்த மாதம் பொலீஸாரால் அடாவடித்தனமான முறையில் கைது செய்தது தொடர்பான விவகாரம் நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்ற மக்களவையிலும் அலசப்பட்டது.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய தமிழ்நாடு பொலீஸின் மூன்று உயர் அதிகாரிகள் மத்திய அரசப் பணிக்கு மாற்றப்பட்டதைக் கண்டித்து அ.தி.மு.க உறுப்பினர் பி.எச்.பாண்டியன் கருத்து வெளியிட்டார்.

அவரது கருத்துக்களுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும் தி.மு.க. உறுப்பினர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சிலர் தமிழக அரசு கலைக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசிடம் கோரினர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் மல்கோத்ரா பேசும் போது கருணாநிதி கைது விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் மீதான நடவடிக்கை போதாது என்று தெரிவித்தார். (ம-7)

ஜனாதிபதியின் கோரிக்கையை எதிர்த்து

# பானைக்கு வாக்களிப்பதற்கு கூட்டணியின் மட்டு. கிளை முடிவு

மட்டக்களப்பு, ஓக. 4

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் முன்வைக்கப்படும் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு எதிராக வாக்களிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்புத் தொகுதிக் கிளை நேற்று முடிவு செய்துள்ளது.

கிளையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த ஏழு ஆண்டு காலமாக அரசு எது விதமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தவறிவிட்டது.

அதேவேளை, நோர்வே அரசின் சமாதான முயற்சியை இதயசுத்தியோடு முன்னெடுத்துச் செல்லவும் தவறிவிட்டது. நான்கு மாத காலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்கு முன்வந்தபோதிலும் அரசு அவர்களது கோரிக்கைக்கு சாதகமான பதில் வழங்காது மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தது.

அத்தோடு 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் அரசியல் தீர்வை மையமாக வைத்து ஏற்கனவே தங்களது ஆணையை வழங்கிவிட்டார்கள்.

எனவே இதற்கென மீண்டும் ஒரு கருத்துக் கணிப்பு—வாக்களிப்பு தமிழ் மக்களுக்குத் தேவையில்லை. அதனால் தமிழ் மக்கள் அரசின் மேல் கொண்டுள்ள எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பின்போது பானைக்கு வாக்களித்து எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் — என்றுள்ளது.

(உ–3)

# இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு செய்தியாளர் செல்ல மீண்டும் தடை!

கொழும்பு, ஓக. 4

ஊடகவியலாளர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வது மீண்டும் பாதுகாப்பு அமைச்சினால் புதன்கிழமையன்று தடை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த இந்தத் தடையை அரசு கடந்த மூன்று வாரங்களின் முன்னர் தான் விலக்கியிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் டபிள்யூ. ஏ. எஸ். பெரேரா இதற்கான உத்தரவை தகவல் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்கவுக்கு ஓகஸ்ட் முதலாம் திகதி கடிதம் மூலம் அனுப்பியுள்ளார்.

பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்தியாளர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு முன்னரே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்புப் படை முகாம்களுக்குச் செல்வதற்கும் படை அதிகாரிகளையோ பொலீஸ் அதிகாரிகளையோ சந்தித்துப் பேட்டி காண்பதற்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும்.

பாதுகாப்புப் படைகள் செய்தியாளர்களுக்கு உணவு வழங்குவது, தங்குமிடம் கொடுப்பது, போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமற்றது என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இப்புதிய நடைமுறை பற்றி பாதுகாப்பு அமைச்சு கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்திற்கும் அறிவித்திருக்கிறது.

(க)

வலி. மேற்குப் பகுதியில்

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த புதிய செயற்றிட்டம்

மூளாய், ஓக. 4

வலிகாமம் மேற்குப் பகுதியில் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்திவரும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

பொன்னாலையில் உள்ள முட்புதர்க் காட்டுப்பகுதிக்குள் நூற்றுக்கணக்கான கால்நடைகள் கைவிடப்பட்ட நிலையில் — கட்டாக்காலிகளாக — திரிகின்றன. இக்கால்நடைகள் அங்கிருந்து கூட்டமாக வெளியேறி வந்து விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களைப் பெருமளவில் சேதப்படுத்தி வருகின்றன. இதனால் மூளாய், பொன்னாலை, சுழிபுரம், தொல்புரம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மிக மோசமாகப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காகவே மேற்படி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி விடயம் குறித்து விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் வலி.மேற்கு பிரதேச செயலர் நடத்திய கலந்துரையாடலின் இறுதியில் இப்புதிய செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்தின் படி கால்நடைகளின் உரிமையாளர்கள் தமது கால்நடைகளை அடையாளம் கண்டுபிடிப்பதற்குக் குறிப்பிட்ட கால எல்லை ஒன்று வழங்கப்படும். எஞ்சிநிற்கும் கால்நடைகளைப்பிடிப்பதற்கு விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கு அனுமதி வழங்கப்படும்.

இவர்கள் மூலமாகப் பிடிக்கப்படும் கால்நடைகளை எவரும் உரிமைகோராத சந்தர்ப்பத்தில் பகிரங்க ஏலவிற்பனை மூலமாக அவை விற்பனை செய்யப்படும். இதன் மூலம் கிடைக்கும் நிதி மேற்படி கால்நடைகளைப் பிடித்ததற்கான கூலிக்கும் அபிவிருத்தி நிதியத்துக்கும் வழங்கப்படும்.

(ம–99)

## சட்டவிரோத மின் பாவனை கண்டுபிடிப்பு

சண்டிலிப்பாய், ஓக. 4

பொன்னாலையில் சட்டவிரோதமான முறையில் நீண்ட காலமாக மின்சாரம் பெற்று வந்த நான்கு வீட்டுக்காரர்கள் மின்சார சபை ஊழியர்களிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

பொன்னாலை கிருஷ்ணன் கோயில் வீதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டு வருவதாக வட்டுக்கோட்டை மின்சார சபை அலுவலகத்திற்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

அதையடுத்து மின்சார சபை ஊழியர்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சட்டவிரோத மின் இணைப்பைத் துண்டித்து வீட்டுக்காரர்கள் பயன்படுத்திய வயர் மற்றும் மின் உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர்.

[க–135]

## உடுப்பிட்டியில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி, ஓக. 4

உடுப்பிட்டிப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகமும், கரவெட்டிப் பிரதேச சபையும் இணைந்து இந் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன.

கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளதால், வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு உடுப்பிட்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

(ஐ·173)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஓக. 4

நயினாதிவு ஸ்ரீ காட்டுக்கந்த சுவாமி கோயில் ஆடிவேல் தீர்த்த உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

(ஐ–173)

★ ★ ★

ஈச்சமோட்டை, கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கதிர்காமத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம்வருவார். (ஐ–17)

★ ★ ★

காரைநகர், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில் ஆடித் திருக்குளிர்ச்சி மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். இதற்கான கிரியைகள் 9 ஆம் திகதி ஆரம்பமாகும்.

(உ–15)

★ ★ ★

கதிர்காமத்தில் இன்று இடம்பெறும் தீர்த்த உற்சவத்தையொட்டி இணுவில் கந்தசுவாமி கோயில் பின்வீதியில் அமைந்துள்ள கதிர்காமக் கந்தன் ஆலயத்திலும் இன்று நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாகேஸ்வர பூசை இடம்பெறும்.

(க–3)

# நாவாந்துறை கோஷ்டி மோதல் குறித்து 'புளொட்' கவலை

யாழ்ப்பாணம், ஓக. 4

உதைபந்தாட்ட மைதானத்தில் நடந்த சர்ச்சையைத் தொடர்ந்து நாவாந்துறைப் பகுதியில் நடைபெற்றுவரும் கோஷ்டி மோதல் குறித்து புளொட் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;–

விளையாட்டுப் போட்டிகள், சமூகத்திலே புரிந்துணர்வுகளை உருவாக்கி சிநேகபூர்வமான நல்லுறவுகளை வளர்க்க வழிகோல வேண்டும்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போது ஏற்பட்ட சர்ச்சை, கோஷ்டி மோதலாகி பொது மக்கள் பாதிக்கப்படுமளவுக்கு விஸ்வரூபமெடுத்துள்ளது. நாவாந்துறையில் இரு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே ஏற்பட்ட பிணக்குகளே இந்நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

பல வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களை மேலும் துன்புறுத்துவதாகவே இச்செயற்பாடுகள் அமைகின்றன. எனவே சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் சமரச நிலைக்கு வந்து வீணான அசம்பாவிதங்களைத் தவிர்த்து பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு செயற்பட முன்வரவேண்டுமெனவேண்டுகின்றோம்.

— என்று அதில் உள்ளது.

(க–7)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஓக. 4

பருத்தித்துறை ஒளி நிறுவனம், வடமராட்சிக் கல்வி வலயத்துடன் இணைந்து நாளை ஞாயிறு போரூட் பயிற்சி மண்டபத்தில் நடத்த விருந்த சர்வதேச தினம் தொடர்பான போட்டிப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–31–182)

## திவ்வியப் பிரபந்த உரை

யாழ்ப்பாணம், ஓக. 4

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் வாராந்தம் இடம்பெறும் திவ்வியப் பிரபந்த வுரைத் தொடரில் இன்று மாலை 4.30 மணிக்கு மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் திருமதி யோ. சிவப்பிரகாசம் 'உன்னையே கதி' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (உ–3)

யாழ். ஆஸ்பத்திரியில்

# பாலியல் நோய் தடுப்புப் பிரிவில் இரத்தப் பரிசோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் தொற்று நோய் தடுப்புப் பிரிவில், இந் நோய்களைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரத்தப் பரிசோதனைக்கான மருந்துப் பற்றாக்குறையினால் கடந்த இரு வாரங்களாக இப்பரிசோதனைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இதனால் நோயாளர்கள் தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளமுடியாத நிலையிலும்—

வைத்திய பரிசோதனைக்காக வந்த புதிதாக நியமனம் பெற்ற, நிரந்தரமாக்கப்பட்ட அரச திணைக்கள, தனியார் நிறுவன உத்தியோகத்தர், ஊழியர்கள் ஆகியோர் வைத்திய பரிசோதனையை மேற்கொள்ளமுடியாத நிலையிலும் திருப்பி அனுப்பப்பட்டவர்.

மருந்துகள் வந்துள்ளதை அடுத்து இந்த வாரம் முதல் இரத்தப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 4

சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்கருகில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ–15–173)

## தாச்சி ஆட்டம்

வலி. வடக்கு, ஓக. 4

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் வலி. தெற்கு பிரதேச சபையின் மருதனார்மடம் திறந்தவெளி அரங்கு மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4- 30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (உ–86)

## சனசமூகநிலைய ஆண்டு நிறைவு விழா

புன்னாலைக்கட்டுவன், ஓக. 4

ஈவினை மத்தி கற்பகவிநாயகர் சனசமூக நிலையத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவும், ஈவினை மத்தி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கற்பகவிநாயகர் சனசமூக நிலைய முன்றிலில் இ. அரிகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன் (பாபு) பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அன்று மாலை கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ–133)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 4

அரியாலையூர் சி. சிவதாஸனின் 'இசைநாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே. இரத்தினம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

சங்கானை பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில், வெளியீட்டுரையை பாரம்பரிய மேம்பாட்டுக் கலைக் கழகத்தைச் சேர்ந்த செ. மெட்ராஸ்மெயில் நிகழ்த்துவார். (உ–15)

## சுற்றிவளைப்பு

புன்னாலைக்கட்டுவன் ஓக. 4

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் நேற்று அதிகாலை 5 மணி முதல் பெருத்த எடுப்பில் சுற்றிவளைப்பு, தேடுதல் இடம்பெற்றது. வீடு வீடாகச் சென்ற படையினர் குடும்ப அட்டைகளைப் பார்வையிட்டனர். (உ–133)

உதயன்

## தார்மீகப் பிழையும் சட்டத் தவறும்

"கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போகப் போவதாகக் கூறினானாம்" - என்ற மாதிரி இருக்கின்றது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய அறிவிப்புக்கள்.

1994ஆம் ஆண்டு வசதியான அளவு நாடாளுமன்றப் பெரும்பான்மையோடு ஆட்சிக் கட்டில் ஏறியவர் அவர். போதாக்குறைக்கு அப்போது எதிரணியில் இருந்துகொண்டு அரசுக்குச் சார்பாகத் தலையாட்டிக் கொண்டிருந்த ஈ.பி.டி.பியின் எம்.பிக்கள் ஒன்பது பேரின் ஆதரவு வேறு அவருக்கிருந்தது.

இந்த வசதி, வாய்ப்பு, ஆதரவு எல்லாம் வைத்துக்கொண்டுதான்-

அந்தத் தேர்தலுக்கு முன்னர், "நான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன்" என்று சூளுரைத்து - வாக்குறுதி வழங்கி - ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையார், அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமலே ஆறு ஆண்டு கால ஆட்சியை முடித்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தி, ஆட்சியைத் தக்க வைத்து ஏழாம் ஆண்டையும் பூர்த்திசெய்திருக்கின்றார்.

இந்த ஏழு ஆண்டு காலத்தில் தெற்கு அரசியலில் தனக்குச் சாதகமான சூழ்நிலை நிலவிய காலமெல்லாம் ஆட்சி, அதிகார வசதிகள், சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு காலத்தை ஓட்டிய ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, இப்போது நாடாளுமன்றில் அடிசறுக்குகின்றபோது 1994இல் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகள் நினைவுக்கு வருகின்றன.

"நான் நிறைவேற்று அதிகாரங்களைக் கைவிடுவதற்குத் தயாராக உள்ளேன். ஆனால் ஐ.தே.கட்சி அரசமைப்புத் திருத்தங்களை ஆதரிக்க மறுத்து வருகின்றது" - இப்படி நாட்டின் முன்னணி பௌத்தபிக்குகளின் முன்னிலையில் உரையாற்றிய போது ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

இது "ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை" என்று சாட்டுக் கூறுவது போல உள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையின்றியே - ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் - ஒருதலைப்பட்சமாகவே - ஜனாதிபதியால் புதிய அரசமைப்பை இப்போது கொண்டு வரமுடியும் என்பது நியாயமானதானால் - இயலுமானால் -

அதனை இந்த ஏழு ஆண்டுகளும செய்யாமல் ஜனாதிபதி இழுத்தடித்து வந்தது ஏன்?

"சட்டத்துக்கு மாறாக நாடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடிக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியதைவிட இப்போது நான் முன்வைக்கும் சர்வஜன வாக்கெடுப்பு வித்தியாசமானது. புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்துவிட்டால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் இலகுவாக முடிவுக்கு வந்துவிடும்" - என்றும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார். இது வெறும் அபத்தப் பேச்சு.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடிப்பதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எடுத்த நடவடிக்கை சட்ட ரீதியானது; அரசமைப்பு வழியிலானது என்று உயர்நீதிமன்றமே அப்போது தீர்ப்பளித்திருந்தது. ஆனால் தார்மீக ரீதியில் அது நெறிமுறையற்றது என்பது உண்மை.

ஆனால் இப்போது அரசமைபபை மாற்ற சந்திரிகா எடுக்கும் நடவடிக்கை முறை - பாணி - தார்மீக ரீதியிலும் பிழையானது; சட்ட ரீதியிலும் தவறானது.

எந்த அரசமைப்புக்காக வாக்களிக்கப் போகின்றோம் என்று தெரியாத நிலையில் மக்களை வாக்களிக்க வைத்து அதனடிப்படையில் தனக்கு விருப்பான ஒன்றை மக்கள் மீது திணிக்க ஜனாதிபதி முற்படுவதால் அது தார்மீக ரீதியில் தவறானது.

அத்தோடு, இப்போதுள்ள அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக, அதனை மாற்ற முற்படுவது சட்ட ரீதியில் தவறானது.

## உண்டேன்... உண்டேன்... சோறல்ல...

இரசிகமணி கனகசெந்திநாதன் 1946இல் எழுதிய சிறுகதை 'ஒரு பிடி சோறு' செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலிலுள்ள வெள்ளிக்கிழமை மடத்தில் நடந்த அன்னதான நெருக்கடியில் ஒரு பிடி சோறு கூடப் பெற முடியாமற்போன ஒரு கிழவியின் அவலத்தைச் சொல்கிறது இக்கதை.


இக்கதை பற்றி ஒரு நிகழ்விலே விமர்சனம் செய்கையில் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் "இதைப் படிக்கும் போது, இது அந்தக் காலக் கதைபோலத் தெரியவில்லை. இன்றைக்கும் அங்கே இதுதான் நடக்கிறது... பந்தியில் இடம் பிடிப்பதற்காக இடிபட்டுத் தள்ளுப்பட்டு ஏங்கி அழுவதை இப்பொழுதும்தான் அங்கு காண்கிறோம்..." என்றார்.

இந்த இடத்திலே எனது சிந்தனை சிறகுகட்டிப் பறந்து சென்று தெஹிவளை விஷ்ணு கோயிலையடைகிறது.

சிவன் இருக்க விஷ்ணுவா? சைவத்தை விட்டுவிட்டு வைணவத்துக்குப் போகலாமா? சைவத்தைச் சிதைக்கும் ஆஞ்சநேயர் வழிபாட்டுக்குத் துணை போகலாமா? என்றெல்லாம் யாரும் பிரச்சினை கிளப்பவேண்டியதில்லை. பிரச்சினை வேண்டாம்... நான் கூறப் போவதெல்லாம் அங்கு வழங்கப்படும் சோற்றைப் பற்றித்தான். நீங்களும் என்னுடன் வந்தால் அங்கு நெருக்குண்ணாமல் சோறுண்ணலாம்.

இந்தக் கோயிலின் சிறப்பு என்னவென்றால் ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு வழங்கப்படும் அன்னதான நிகழ்ச்சிதான். கொழும்பிலுள்ள தமிழர்கள் எல்லாருமே கூடிவிட்டது போன்ற அத்தனை பேர்களுக்கும் உணவு வழங்குவதென்றால் அது இலேசான காரியமா? ஆனால், அதனை அந்த ஆலயத்தொண்டர்கள் எவ்வளவு கச்சிதமாகவும் — யாரும் குறை சொல்ல முடியாத வகையிலும் நிறைவேற்றி வருகிறார்கள்!

அங்கு கூடுகின்ற அவ்வளவு சனங்களும் அநேகமாகச் சாப்பிட்டுவிட்டுத்தான் போகிறார்கள். அதெல்லாம் கௌரவக்குறைவு என்றோ 'பாவச் சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதாகும்' என்றோ எவரும் நினைப்பதில்லை. அதிலும் 'லொட்ஜ்'களிலும் 'அனெக்ஸ்'களிலும் அடைந்து கொண்டு 'நொட்டைத்தீன்' சாப்பிட்டு 'வயித்துக்கு வஞ்சனை' செய்து வருகின்றவர்களுக்கு வாரம் ஒரு நாள் கிடைக்கின்ற வீட்டுச் சாப்பாடு போன்றது — விஷ்ணு கோயில் சாப்பாடு. அதனால் கோயில் சுற்றாடலில் வசிப்பவர்கள் மட்டுமல்ல கொட்டாஞ்சேனை, மட்டக்குளி போன்ற தூர இடங்களில் இருந்தும், அதிக பணம் செலவு செய்து அங்கு வருபவர்களையும் காணமுடிகிறது.




இந்த அன்னதானம் ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாது இடம்பெற்று வருகிறது. வேண்டுமானால், சனிக்கிழமைத் தமிழ் தினசரி ஒன்றில் ஆலய நிர்வாகத்தினர் வெளியிடுகின்ற அந்த விளம்பரத்தைப் பார்த்தும் அதனை உறுதி செய்து கொள்ளலாம்.

அங்குள்ள அன்னதான மண்டபமானது மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயில் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. முதல் மாடியில்தான் அன்னதானம் நடைபெறுகிறது. ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் அமரக்கூடிய பெரிய மண்டபம். சாப்பிட விரும்புகிற எவருக்கும் ஐந்து நிமிட அவகாசத்தில் பந்தியில் இடம் கிடைத்து விடும்; ஏமாற்றம் என்பது எவருக்கும் கிடைக்காது. இதே அளவிலான இரண்டாவது மாடியும் பாவனைக்குத் தயார் நிலையில் இருந்த போதிலும், அதற்கான தேவை இன்னமும் ஏற்படவில்லைபோலிருக்கிறது.

அங்கு வழங்கப்படும் சாப்பாட்டிலும் குறை சொல்வதற்கில்லை. சம்பாச் சோறு... அதற்கேற்ற உவப்பான கறிவகைகள்... தயிர், பருப்பு, பாயாசம் கூட உண்டு... 'யாழ்ப்பாணத்தவர்களுக்கு அப்பளப் பொரியல் இல்லாவிட்டால் சாப்பாடு இறங்காது' என்று சிங்கள அன்பர்கள் கூறுவதுண்டு. அங்கு 'சாப்பாடு இறங்குவதற்காக அப்பளமும் போடுகிறார்கள்...'

தெஹிவளை கோயிலுக்குப் போவதால், சிரம பரிகாரத்துடன் வேறு பல சகாயங்களும் பெறலாம். தமிழர்கள் அதிகமாக ஒன்று கூடுகின்ற இடமாக அது இருப்பதால் வேண்டியவர்களைச் சந்திக்கவும்... புதிதாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களிடமிருந்து புதினங்கள் அறியவும்... யாழ்.செல்ல விரும்புகிறவர்களைத் தேடிப்பிடித்துக் கடிதங்கள் கொடுத்துவிடவும்... இப்படிப் பல வாய்ப்புக்கள்.

கோயிலிலிருந்து கூப்பிடு தூரத்திலேதான் (அதாவது மைக்கில்...) தெஹிவளை மிருகக்காட்சியகமும் (ZOO) இருக்கிறது. அங்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை விசேட நிகழ்ச்சியாக யானைகளின் சாகசங்கள் உண்டு. கோயிலுக்குப் போகிறவர்கள் தங்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் இதனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த சண் அங்கிள் எவ்வளவு கெட்டிக்காரன் என்று இப்பொழுது தெரிகிறதா? விஷ்ணு — ஆஞ்சநேயர் பிரச்சினைகளில் தலையை நுழைத்துக் கொள்ளாமல், உங்களுக்கு அக்கோயிலைக் காட்டி விட்டேனல்லவா?

சாப்பாடு இருக்க இதோ, ஒரு பாட்டு...

வழுதி கலியாணத்துக்குப் போய் வந்த ஔவையாரிடம் "எப்படி அந்தக் கலியாணச் சாப்பாடு?" என்று கேட்டதற்கு, அவர் சொன்ன பதில் இது...

*வண்ட மிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து*
*உண்ட பெருக்கம் உரைக்கக்கேள் — அண்டி*
*நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே*
*சுருக்குண்டேன் சோறுண்டிலேன்.*

செல்வச்சந்நிதி கோயிலில் இப்பொழுதும் இது தான் நிலைமை என்று கோகிலா சொல்லக் கேள்வி. ஆனால் தெஹிவளை கோயிலில் அப்படியல்ல.

— சண் அங்கிள்.

## அரச பாடசாலைக் காணிகளை நில அளவை செய்யும் பணி ஆரம்பம்

மூளாய்,ஓக.4

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகள் அமைந்துள்ள காணிகளை நில அளவை செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நில அளவைத்திணைக்களம் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலையின் காணிகளும் நில அளவை செய்யப்பட்டு உரிய முறையில் வரை படங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

அரச பாடசாலைகளின் காணி எல்லைகள் மாற்றமடைவதைத் தடுப்பதற்காக எல்லைக்கற்களும் நாட்டப்பட்டுவருகின்றன. (ம-99)

### நாளை

ஆடி 19
ஞாயிற்றுக்கிழமை
திதி: பிரதமை
பிற்பகல் 1.19 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு 1.06 வரை.
கரிநாள்
சுபநேரம் : 9.04 - 10.34
ராகுகாலம் : 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வீழ்வது வெட்கமல்ல; ஆனால் வீழ்ந்தே கிடப்பதுதான் வெட்கமானது.

## நாட்டு நடப்பு

### நல்லையில் - V

அஞ்சுகம் அழகாய் வந்தாள்
அரவிந்தனும் அவிந்து போனான்
கெஞ்சவே மிஞ்சிக் காதல்
கிளுகிளு லவ்வாய்ப் போச்சு
மஞ்சத்து மாலை அன்று
மறைவாகத் தந்தாள் முத்தம்
வஞ்சகி மனம் அறியாது
வழங்கினான் தங்க மோதிரம்
அஞ்சினான் தேரில் அன்று
அன்புக் குழந்தையோடு போறாள் அங்கை.

- *விகடகவி.*

## 'பூரணை தினத்தில் ஒரு மரணம்'

## சிங்களத் திரைப்படத்தை திரையிட நீதிமன்றம் அனுமதி

கொழும்பு,ஓக.4

தடைசெய்யப்பட்ட திரைப்படத்தை திரையிடுமாறும், திரைப்படத்தைத் தயாரித்தவரிற்கு நஷ்ட ஈடாக ஐந்து லட்சம் ரூபாவை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் வழங்கவேண்டும் எனவும், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'புரஹந்த களுவர' (பூரணை தினத்தில் ஒரு மரணம்) என்ற திரைப்படம் பிரசன்ன விதானகே என்பவரால் தயாரிக்கப்பட்டு சர்வதேச திரைப்பட விழாக்களில் பல விருதுகளைப்பெற்றது.

இன்று வடக்கு-கிழக்கில் இடம்பெறும் போரின் உக்கிரத்தையும், அதன் விளைவுகளையும் சித்திரிக்கும் இந்தத் திரைப்படத்தை அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தித் தடைசெய்திருந்தது. அமைச்சர் சரத் அமுனுகம இத்திரைப்படத்தைத் தடைசெய்யும் உத்தரவைப் பிறப்பித்தார்.

தனது சுதந்திரத்தையும் உரிமையையும் இத்தடை உத்தரவு மீறுவதாக அதன் தயாரிப்பாளர் பிரசன்ன விதானகே உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்குதல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, கலாநிதி அமரசிங்க, எதுசூரிய ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் மனத் தைரியத்தை இத்திரைப்படத்தின் கருப்பொருள் குறைக்கச் செய்யும் என்று தெரிவித்து அரசாங்கம் இத்திரைப்படத்தை தடைசெய்திருந்தது.

ஒரு திரைப்படத்தைக் கலைப்பூர்வமாக எடுத்துக்காட்டும் தனது சுதந்திரத்தை இத்தடை பாதித்துள்ளதாக இதன் தயாரிப்பாளர் கூறியிருக்கிறார்.

இத்திரைப்படத்தைத் தடை செய்ததன் மூலம் இதன் தயாரிப்பாளரின் உணர்வுகள் பாதிக்கப்பட்டதைத் தாம் ஏற்றுக்கொள்வதாக நீதியரசர்கள் தெரிவித்தனர். 5 லட்சம் ரூபாவை திரைப்படக் கூட்டுத்தாபனம் நஷ்ட ஈடாக வழங்கவேண்டும் எனவும் இதனைத் தடைசெய்ய உத்தரவு பிறப்பிக்க அமைச்சர் சரத் அமுனுகம தனது சொந்தப்பணத்தில் 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.(ஐ)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடியோர் சிக்கினர்

வலி.தெற்கு,ஓக.4

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் கோயில் சூழலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக்கூறப்படும் நான்கு நபர்களை அவ்வூர் மக்கள் பிடித்து சுன்னாகம் பொலீஸில் ஒப்படைத்துள்ளனர்.

சுன்னாகம் மேற்கு கிராம சேவையாளர் ஊடாகப் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நால்வரும் சுன்னாகம் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

சுன்னாகம் பொலீஸார் இநத நாலவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது இவர்களை இம்மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ-152)

## தமிழ் மொழிமூல தகுதிகாண் ஆசிரியர்கள் 51 பேர் நியமனம்

வலி.தெற்கு,ஓக.4

ஜி.சீ.ஈ. உயர்தர வெட்டுப்புள்ளி அடிப்படையில் மற்றொரு தொகுதி தமிழ்மொழிமூல தகுதிகாண் ஆசிரியர்கள் விரைவில் நியமனம்பெறவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாறான தகுதிகாண் ஆசிரியர்கள் 51 பேர் நியமனம்பெறவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த இந்த 51பேர்களுக்குமான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மருதனார்மடத்தில் உள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் கல்வித் திணைக்களத்தினால் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-152)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கைவிட்ட காணியில் கால் வைக்கும் முன்
ஒரு கணம் யோசி....!
காலை மிதிவெடியிடம் அடகு வைத்துவிட்டு
நீ காலமெல்லாம்
கைத்தடியை சுமக்கப் போகிறாயா?

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

*மீன்பிடியியல் டிப்ளோமா*
*நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)*
*கற்கை நெறிகளின் புதிய அனுமதிகளுக்கான பரீட்சைகள்*

01. மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான நேர்முகப் பரீட்சை 23.08.2001 அன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெறும்.
02. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை 08.09.2001 சனிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், ஏனைய மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.
03. நுண்கலைமாணி (இசை/நடனம்) கற்கை நெறிகளுக்கான செயன்முறை/நேர்முகப் பரீட்சைகள்.
இசை - 10.09.2001 இல் இருந்து 14.09.2001 வரையும்.
நடனம் - 17.09.2001 இல் இருந்து 21.09.2001 வரையும்.
காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெறும்.

★எல்லாக் கற்கை நெறிகளுக்குமான பரீட்சை அனுமதி அட்டைகள் தகுதியான விண்ணப்பதாரிகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

- பதிவாளர்.
02.08.2001. (C/17693)

# பாராட்டி நன்றி கூறுகின்றோம்

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் புனரமைப்புக்கு ரூபா 3லட்சம் (மூன்று லட்சம்) நிதி ஒதுக்கீடு செய்து அதில் ரூபா 1 1/2 லட்சத்தை உடனடியாக வழங்கிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான
**திரு.K.V.குகேந்திரன்** (ஜெகன்)
அவர்களுக்கும்



வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், இந்துசமய விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான
**உயர்திரு.ந.திரிலோகநாதன் J.P.U.M.**
அவர்களுக்கும்

எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகா கணபதிப் பிள்ளையாரின் அருள் அவர்களுக்கு என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

- பரிபாலன சபையினர்,
சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோயில்.
(90798)

# இரண்டாம் ஆண்டு
## நீங்காத எம் நினைவலைகள்

"நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது"
(கொலோசெயர் 3:3)

மண்ணில்
1965 - 01 - 14



கிறிஸ்து மடியில்
1999 - 08 - 04

## அமரர் சிவசம்பு ஆனந்தராசா

விண்ணதில் நம் இயேசு தோன்ற
மண்ணதில் இக்கல்லறை திறங்க
கண்டிடுவோம் உம் திருமுகம்
காலமெல்லாம் நம் இயேசுவுடன்

*இல.60,*
*விஸ்ணன்றி பிள்ளையார் கோவிலடி,*
*காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
(90789)

## விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.4

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமற்போன 5பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களின் உறவினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

காணாமற்போனவர்களின் பெயர் விவரம், கோவை இல., சாட்சிகளின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

★ இமானுவேல் மரிய ஜெயசீலன், (கோவை இல-பி-29), பாடசாலை வீதி, நாவற்குழி, கோபாலசிங்கம் ஜீவபாலன் (பலாலி வீதி கோண்டாவில் கிழக்கு).

★ இராசையா அதர்மன் (கோவை இல-பி-ஐ-9/186), இல.167, விபுலாநந்தர் வீதி, அரியாலை, சாந்தன் சித்திரா.

★ நடராஜா சசிகரன் (கோவை இல-பி-ஐ-9/8), நீர்வேலி வடக்கு. சண்முகதேவன் விதுரன்.

★ காசிப்பிள்ளை கேதரநாதன் (கோவை இல-பி-ஐ-9/188), இல. 488/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை.

★ சடையன் பொன்னம்பலம் (கோவை இல-பி-ஐ- 9/211), கைதடி வடக்கு. பொன்னுத்துரை (உடுவில்), பார்வதி சடையன் (கைதடி வடக்கு)
(ஐ-6)

## சரவணை சின்னமடு திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.4

சரவணை சின்னமடு மாதா ஆலயத் திருவிழாத் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆயர். அதிவண. தோமஸ்சவுந்தரநாயகம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அங்கு நற்கருணை வழிபாடு இடம்பெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலியில் பொதுமக்கள் பங்கு கொள்வதற்கு வசதியாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இன்று சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் மற்றும் இன்று மாலை சின்னமடுமாதா ஆலயத்துக்கு வரும் பொதுமக்கள் ஆலயத்தில் தங்கி நின்று திருவிழாத் திருப்பலியில் பங்கு கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் - ஆலய பரிபாலகர் தெரிவித்தார்.
(ஐ-6)

## மருதடி குளத்தின் வாய்க்கால் அமைக்க நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய், ஓக.4

சங்கரத்தை - நவாலி பகுதியிலுள்ள முதலியார் குளத்தில் தடுப்பு சுவர் கட்டுவதற்கும், மருதடி குளத்தின் வாய்க்கால் அமைப்பதற்கும் நீர்ப்பாசனத் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இவற்றின் ஒப்பந்த வேலையை மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் பொறுப்பேற்றுள்ளது.

மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## புலமைப்பரிசில் அனுமதி அட்டை விநியோகம்

வலி.தெற்கு, ஓக.4

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகளைத் தத்தம் கோட்டக் கல்வி அலுவலகங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிக்குப் பின்னர் சென்று பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (ஐ-152)

## நிதி உதவி

குடத்தனை 'சுடர் ஒளி' சனசமூக நிலையத்துக்கு 5 லட்சம் ரூபா புனரமைப்புப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'றான்' நிதியிலிருந்து பருத்தித்துறைப் பிரதேச சபைக்கூடாக இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி

குருநகர் சமூக சேவை அமைப்பின் அங்கத்தவரான
**திருமதி இம்மனுவல் அனா மாசிலா மரியா**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருநகர் சமூக சேவை அமைப்பு
(குருநகர், ஜேர்மனி)
(90802)

# பாராட்டி நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு பற்றிமா அன்னை ஆலயப் புனரமைப்புக்காக மூன்று இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கி அதில் 150 ஆயிரம் ரூபா நிதியை உடன் வழங்கி உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார இந்துசமய கலாசார அமைச்சரும், ஈ.ம.ஜ. கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான
**திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



நெடுந்தீவுப் பொறுப்பாளர்
**திரு.கே.நவநீதன்**
(தோழர் மோகன்)
அவர்களுக்கும்

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்
**புலவர் A.W. அரியநாயகம் J.P.U.M.**
அவர்களுக்கும்

எமது ஆலய மக்கள், நிர்வாகிகள் சார்பில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், 1991ஆம் ஆண்டு எம் தீவகத்தில் செயலாளர் நாயகம் அவர்கள் காலடி வைத்தசமயம் இந்த சிறிய ஆலயத்தில் இடம்பெற்ற முதல் திருப்பலியில் அவர் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பற்றிமா அன்னை ஆலயம்,
நெடுந்தீவு.

பங்குத்தந்தை,
நிர்வாகிகள்,
ஆலய மக்கள்.
(90795)

# மனம் நிறைந்த நன்றிகூறி வாழ்த்துகின்றோம்

யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தின் புதிய மேல்மாடிக் கட்டடத் தொகுதியின் ஒரு பகுதியை அமைப்பதற்கு பத்து லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து உகந்து அளித்தமைக்கு



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் மாண்புமிகு கௌரவ அமைச்சருமான
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான கௌரவ
**கா.வே.குகேந்திரன்** (கே.வி. ஜெகன்)
அவர்களையும்,



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர்
**உயர்திரு. க.மணிபல்லவராஜன்** (நிசாந்தன்)
அவர்களையும்

யாழ்ப்பாணக் கட்சி அமைப்பாளர்
**திருவாளர் ரி.றீகன்** (றாபன்)
அவர்களையும்
கட்சியின் உறுப்பினர்
**திருவாளர் சி.மனோகரன்** (கேதீஸ்)
அவர்களையும்

1999ஆம் ஆண்டிலிருந்து எமது பாடசாலைக்குப் பல்வேறு வழிகளில் உதவிகளைப் பெற்றுத்தரும் யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள்
**திருவாளர் மா.கனகரட்ணம்**
**திருவாளர் மோ.எட்வேட்** (பப்பா)
**திருவாளர் மை.ஜேசுதாசன்**
ஆகியோரையும்

ஏனைய உறுப்பினர்களையும் பாராட்டிமனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இவர்களின் சேவை குன்றின் மேல் ஒளிரும் சுடராகச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்,
**யா/புனித மரியாள் வித்தியாலயம்**
**(ஓ.எல்.ஆர்)**
(90806)

# பரதநாட்டியம் ஒரு தெய்வீகக் கலை; அதைப் பயில தெய்வகடாட்சம் தேவை

பரதநாட்டியக்கலை தெய்வீகத்துடன் தொடர்புடையது. எனவே அந்தக் கலையைப் பயில்பவர்களும் தெய்வீக அம்சங்கள் பொருந்தியவர்களாய், குரு பக்தி, அன்பு, அடக்கம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

கலைகள் கவலைகளைப் போக்கக் கூடியவை. இதனால்தான் எத்தகைய துன்பங்கள், இடம்பெயர்வுகள் ஏற்பட்ட வேளையில் எல்லாம் எம் மக்கள் கலைகளைக் கைவிட்டதில்லை.

எனவே வளரும் இளம் பரதநாட்டியக் கலைஞர்கள் இவற்றை உணர்ந்து கலைக்காகவே தம்மை அர்ப்பணிக்க முயலவேண்டும்.

இவ்வாறு தனது கலை அனுபவத்தை - முதிர்ச்சியை - வெளிப்படுத்தியிருக்கின்றார் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் நடன ஆசிரியையும், யாழ்.கல்வி வலயத்தின் நடனக் கல்விக்கான ஆசிரிய ஆலோசகருமான



நாட்டிய ஆசிரியையின் ஒரு தோற்றம்

திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்.

உரும்பிராய் கலைக்கோயில் நாட்டியப் பாடசாலையின் இயக்குநரான திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் 'கலைச்சுடர்' பகுதிக்கு வழங்கிய செவ்வியின் தொகுப்பு இது.

1952ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி உரும்பிராய் தெற்கில் சிற்றம்பலம், திருமதி நடராஜா, திருமதி நபூபதி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்த திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் கலைக்காகவே தம்மை அர்ப்பணித்த குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவரின் மாமனாரான சங்கீத பூஷணம் பொன்.புஷ்பரட்ணம் திருநெல்வேலியில் இசைக்கல்லூரி அமைத்து இசைவளர்த்தவர். தயாரான திருமதி நபூபதியும் சங்கீதக் கலையை நிறைவாகக் கற்றுக் கொண்டவர். எனவே இத்தகைய கலைப்பின்னணியைக் கொண்ட திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைக் காலத்திலேயே பரதநாட்டியக் கலையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய இவர் 1961ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை கொக்குவில் 'கலாபவனம்' நாட்டியப் பாடசாலையில் அதன் இயக்குநரான ஏரம்பு சுப்பையா என்பவரிடம் பரதநாட்டியக் கலையை முறைப்படி கற்றுக்கொண்டார்.

கொக்குவில் கலாபவனத்தையும் அதன் இயக்குநரான ஏரம்பு சுப்பையாவையும் தெரியாதவர்கள் - அறியாதவர்கள் - இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். அந்தளவுக்கு கலையுலக வளர்ச்சிப்பாதையில் இவர்கள் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளனர்.

யாழ்பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோர் உட்பட இன்னும் பலர் கொக்குவில் கலாபவனத்தில் ஏரம்பு சுப்பையாவிடம் பரதநாட்டியக் கலையை முறைப்படி பயின்றவர்களாவர். இவ்வாறு கலையுலகுக்கு கலைஞர்களை அள்ளி இறைத்த பெரும் நிறுவனத்தில் பயின்ற திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், 1967 முதல் 1972 வரை திருநெல்வேலி 'கலைக் கோவில்' நாட்டிய நிலையத்தில் 'கதகளி' நாட்டிய வகையை கலைஞர் வேல் ஆனந்தனிடம் கற்றுக்கொண்டார்.

இவ்வாறு பரதநாட்டியம், கதகளி முதலிய நாட்டிய வகைகளை முறைப்படி ஏரம்பு சுப்பையா, வேலானந்தன் ஆகியோரிடம் கற்றுக்கொண்ட அவர் கலை மீது கொண்ட ஈடுபாடு காரணமாக இந்தியா சென்று 1972 முதல் 1974ஆம் ஆண்டு வரை கேரள மாநிலத்தில் கலைஞர் குருகோபிநாத் என்பவரிடம் கதகளியையும், அடையாறு கே.லக்ஷ்மணனிடம் பரதநாட்டியத்தையும் பயின்று கொண்டார்.




பின்னர் இலங்கை திரும்பி 1977ஆம் ஆண்டு முதல் நடன ஆசிரியையாகக் கடமையாற்றத் தொடங்கினார்.

வவுனியா மத்திய மகாவித்தியாலயம்,வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியன இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் சிலவாகும். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1982 முதல் 1998 செப்ரெம்பர் வரை நடனஆசிரியையாகக் கடமையாற்றிய இவர் அங்கு பல மாணவர்களுக்கு பரதநாட்டியக் கலையை முறைப்படி கற்பித்து அவர்களை கலையுலகில் பிரகாசிக்கச் செய்துள்ளார்.

1982ஆம் ஆண்டுவரை ஆயிரத்துக்கும் அதிகமான மேடைகளில் இவர் தனது நாட்டியத்திறமையை



நாட்டிய ஆசிரியை திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்

வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, நீர்கொழும்பு, வவுனியா உட்பட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற நாட்டிய நிகழ்வுகளில் இவர் பங்குகொண்டதுடன், கர்ணன்,

**நாட்டிய ஆசிரியை பத்மினி செல்வேந்திரகுமார் செவ்வி**

மேனகை, இராமர், கிருஷ்ணர், யேசு, சிவன் முதலிய பாத்திரங்களை ஏற்று தனது நாட்டியத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

1980ஆம் ஆண்டு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலைஞர் வேல் ஆனந்தனின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்டபதகளி ஆடலரங்கில் பங்குகொண்ட இவர் நாட்டிய ஆசிரியைகளுக்கு முன்மாதிரியாகவும் நடந்து கொண்டார்.

தொடர்ந்து கலைஞர் வேல் ஆனந்தனின் நாட்டியக் குழுவினர் 1982 ஆம் ஆண்டு லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய இடங்களுக்குச் சென்று ஆடலரங்குகளை நடத்தினர். இந்தக் குழுவில் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும் ஒருவராக இடம்பெற்று தனது கலைத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

**சந்திப்பு:ஆனந்தன்**

சொந்தஇடமான உரும்பிராயில் 'கலைக் கோயில்' என்னும் நாட்டிய நிலையத்தை ஆரம்பித்த திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், நூற்றுக்கணக்கான மாணவிகளை நாட்டிய கலையுலகுக்குப் பெற்றுத்தந்துள்ளார். இவ்வாறு இந்த நிலையத்தில் நாட்டியத்தைப் பயின்றவர்கள் பலர். அவர்களில் திருமதி புவனேஸ்வரி வேல்நிதி, திருமதி சந்திரவதனி பகீதரன், திருமதி யசோதா செல்வக்குமார், திருமதி தர்மதேவி மனோகரன், செல்வி சுஜாத்தா வாமதேவன் ஆகியோர் இன்று பல்வேறு கல்லூரிகளில் நாட்டிய ஆசிரியைகளாகக் கடமையாற்றி வருகின்றனர்.

தற்போதும் சுமார் 200 இற்கும் அதிகமான மாணவிகள் உரும்பிராய் கலைக் கோவிலில் திருமதி பத்மினி செல் வேந்திரகுமாரின் நெறிப்படுத்தலில் பரத நாட்டியக் கலையைப் பயின்று வருகின்றனர்.

வடஇலங்கைச் சங்கீத சபையின் பரீட்சகராகவும், ஜி.சீ.ஈ.சாதரணதர, உயர்தரப் பரீட்சைகளுக்கான பரீட்சகராகவும் கடமையாற்றிவரும் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் தற்போது யாழ். கல்விவலயத்தின் நடனபாடத்துக்கான ஆசிரிய ஆலோசகராகவும் பணிபுரிந்துவருகின்றார்.

கடந்தவருடம் சுவிஸ் நாட்டுக்கு பரீட்சகராகச் சென்ற அவர் அங்கு நடனக் கல்விக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் பற்றி பின்வருமாறு கூறினார்.

"நடனத்தைப் பயில வேண்டுமென்ற விருப்பம் அங்குள்ள பலரிடம் அதிகமாக உள்ளது. இலங்கை, இந்தியா முதலிய நாடுகளில் இருந்து அங்கு செனற சுமார் 20ஆசிரியைகள் நாட்டிய நிலையங்களை நிறுவி நாட்டியக் கலையைக் கற்பித்து வருகின்றனர். முந்நூறுக்கும் அதிகமான தமிழ் மாணவிகள் நாட்டியக் கலையைக் கற்றுவருகின்றனர் - என்றார்.

"பரதநாட்டியத்தை முறைப்படி - விருப்பத்துடன் பயில்பவர்கள் எத்தகைய இடர்வரினும் அதனைக் கைவிடக்கூடாது. திருமணம் என்பது



பத்மினி செல்வேந்திரகுமாரின் நடனக் காட்சி

கலைவளர்ச்சிக்கு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டாது. இன்னும் சொல்லப் போனால் அது கலை வளர்ச்சிக்கு ஒரு உந்துதலே"-

என்றும் நாட்டிய ஆசிரியை திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் கூறினார். ★



## என்கே கணேசா! என் இனிய சோதரனே!!

என்கே கணேசா! என் இனிய சோதரனே!!
இசைக் குழலை வைத்துவிட்டு உயிர்பிரிந்து போனவனே
காலமெல்லாம் கானமழைதான் பொழிவாய் என்றிருந்தோம்
வானவர்கள் உனையழைக்க வசமிழந்து போனாயோ?

உனைப் போலிங்கு இனியொருவர் வரமாட்டார்
தன்னை மறந்திருந்து தமிழிசையும் தரமாட்டார்
என்ன நினைத்தாலும் இத்துயரம் மாறாது
வன்னக் குயிலே வடிவழகா ஆறாது இச்சோகம்!

சிரித்த முகத்துடனும் எழில் ததும்பும் நடையுடனும்
இனித்த இசைவழங்கிச் சபையோரை மயக்கிவைப்பாய்
தனித்த உன்கைவண்ணம் இசையுலகில் பேர்வண்ணம்
பனித்த எம்கண் நீர் சொரியப் பரிதவிக்க வைத்தாயே!

உன்னிசைக்கு உலகோர் வழங்கிநின்றார் பட்டங்கள்
ஊர்மக்கள் உனை உயர்த்தப் போட்டிருந்தார் திட்டங்கள்
பண்ணிசைத்த பூங்குயிலே எல்லாம் பறிபோக
வண்ணத்துப் பூச்சியென நீ பறந்து போனாயே!

உன்குழலின் இன்னிசையும் உள்ளத்தில் தூய அன்பும்
என்னை மயக்கியுன்னை உறவுகொள்ள வைத்தனவே
காரநகர்த் தலங்களெல்லாம் நான் திரிந்து பாடுகையில்
பார்வணங்கும் கலைஞன் நீ பண் சேர்த்துத் தந்தாயே!

நல்ல இசை என்காதில் வீழுகின்ற போதெல்லாம்
வல்லவனே நினைத்திடுவேன் உனக்காகப் பிரார்த்திப்பேன்
எல்லா நலமும் உனைச் சேர வேண்டி நிற்கப்
பொல்லாத காலன் உனை அழைத்துப் போனானே!

உற்றாரும் மற்றோரும் உயிர்கலங்கி நிற்கின்றோம்
வற்றாத கண்ணீரால் தேம்பி வீழ் சொரிகின்றோம்
கற்றானைக் குன்றை மருதடியில் விநாயகனை
சொற்றாமரை சொரிந்து ஏத்துகின்றோம் உனை அணைக்க.

*"என்கே கணேசன் என்ற இசை மகனின் நன்நாமம்*
*கலையுலகில் என்றென்றும் நிலவிநிற்கும் - இது உறுதி"*

*கலைஞன் கணேசன்*
*பிரிவால் கலங்கிநிற்கும்*
*ஏகநாதன்.*



ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் ஜெ.ஜெயராஜின் கைவண்ணத்தில் வரையப்பட்ட கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத் திரைச் சீலையின் அழகுத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (ஐ-152)

# சொக்கனுக்குப் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.4

நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீபால கதிர்காமம் தேவஸ்தானம் ஆண்டு தோறும் உற்சவகாலத்தில் நடத்தும் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்) இந்தமுறை தேவஸ்தானத்தினரால் 'குகஸ்ரீ' விருது வழங்கிப் பாராட்டப்படவுள்ளார்.

பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக மல்லாகம் நீதிவானும் மாவட்ட நீதிபதியுமான பா.சுப்பிரமணியம் கலந்துகொள்வார்.

விழாவில் 'ஆன்மீகவாதியான சொக்கன்' என்ற தலைப்பில் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரும்-

'நாடகத்துறையில் சொக்கன்' என்னும் தலைப்பில் பாலகதிர்காம தேவஸ்தான ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு.குமாரக்குருக்களும் -

'உயர் கல்வியில் சொக்கன்' என்னும் தலைப்பில் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் -

'தமிழ்த்துறையில் சொக்கன்' என்ற தலைப்பில் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் -

'ஆக்க இலக்கியப் பணியில் சொக்கன்' என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசாவும் -

'சமூகப்பணியில் சொக்கன்' என்னும் தலைப்பில் யாழ்.இந்து அதிபர் அ.ஸ்ரீகுமரனும் -

பாராட்டுரைகளை வழங்குவர். (ஐ)

## கப்பல்களுக்கான கட்டணமும் உயரும்

கொழும்பு,ஓக.4

கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு யுத்த இடர்கால மேலதிகக் கட்டணமாக பெரும் தொகையை விதிப்பது என அரசு தீர்மானித்துள்ளது.

கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதல் சம்பவத்தையடுத்து, ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தனது சேவைகள் பலவற்றை ரத்துச் செய்துள்ள நிலையில், கப்பல் மூலமான வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கும் சமயத்தில் இந்த மேலதிகக் கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், கொழும்புத் துறைமுகத்தை அபாயம் உள்ள பிரத்தியேகத் துறைமுகங்கள் பட்டியலில் ஜப்பான் சேர்த்துள்ளது. (உ-ஒ)

## பணியகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்ப்பாணத் தொழில் முனைப்பு மேம்பாட்டுப் பணியகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாண அலுவலகத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)

# பாலர் மனங்களில் பதிவுகள் பல தந்த பாவேந்தன் சத்தியசீலன்

**அண்மையில் காலமான குழந்தைக் கவிஞர் பாவலன் பாவிலு சத்தியசீலனின் முதலாம் மாத நினைவாக இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**



ஒரு கலைஞன் வாழ்வு அவன் இறப்போடு முடிந்துவிடுவதில்லை. நல்ல படைப்பால் அவன் வாழும் சமூகத்தில் மட்டுமல்ல உலகெங்கும் தன் படைப்புக்களால் வாழ்வான். அந்த வகையில் தடம் பதித்த கலைஞனாக - படைப்பாளியாக - வெளியீட்டாளனாக - நாடக நெறியாளனாக - சிறந்த மேடைப் பேச்சாளனாக - நல்லாசிரியனாக - குழந்தைக் கவிஞனாக எம் மண்ணில் பல பதிவுகளைத் தந்து சென்றவர்தான், பா.சத்தியசீலன் அவர்கள்.

15.06.1938இல் அல்லைப்பிட்டியில பிறந்த பாவிலு சத்தியசீலன் அவர்கள், நவாலியில் திருமணம் செய்து நான்கு பிள்ளைகளின் தந்தையாக வாழ்ந்தார். இவர் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற வேளைகள், மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பாசறை அவரை ஞானத்திலும் புடமிட்டு ஆன்மீக வாஞ்சைகளுடன் வளர்த்தது.

### நீத்தார் நயப்புரை

தமிழ் மீது கொண்ட காதல் அவரை தமிழின் சுவைதேடி, பண்டிதராக, தமிழ்ப் பட்டதாரியாக, நல் ஆசிரியராக வெளிப்படுத்தியதுடன், கல்விச்சமூகத்தில் பாடப்புத்தகங்களில் குழந்தைப் பாடல்கள் படைத்து இன்றும் குழந்தைகள் பாடிப பழகிய குழந்தைக் கவிஞராகத் தனது பதிவுகளை எம் சிறார்களின் மனங்களில் பதிய வைத்தார்.

*"கப்பல் நல்ல கப்பலாம்*
*கடலில் செல்லும் கப்பலாம்"*

போன்ற பாடல்களைப் பதிவாகத் தன் அயராத முயற்சியின் பயனாக 22 நூல்களை வெளியிட்டு சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றதோடு, 'யுனிசெவ்' நிறுவனத்தின் சிறந்த தெரிவாக 'மழலைத் தமிழ் அமிழ்தம்', 'புத்தியால் வென்ற நத்தையார்', 'சந்தனப்பொட்டுச் சுந்தரம் பிள்ளை' என்னும் நூல்கள் வெளியிடப்பட்டன. 1985 வரை தெரிவான நூல்களில் சிறந்ததாக 'பாட்டு' என்னும் நூலும் 1986இல் வெளிவந்த சிறந்த நூலாக 'கப்பல்' என்னும் நூலும் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதை வென்றன. 1989 இல் 'பாட்டு விளையாட்டு', 'மகிழ் நத்தார்', 'உலகினுக்கு ஓர் உடன் பிறப்பு', 'பைபிள் கதைகள்', 'ஐஸ் கிறீம்', 'அணிலார்' என சிறுவர் இலக்கியப் பரப்பில் பல முத்திரைகளைப் பதித்து வைத்தார்.

1960 முதல், சுதந்திரன், ஈழநாடு, கலைச்செல்வி, தினகரன், வீரகேசரி, தினபதி, பாதுகாவலன், உதயன் எனப் பத்திரிகை பலவற்றில் அவரது படைப்புகள் பதிவாகியதுடன், பட்டிமன்றம், நாடக அரங்கு, கவி அரங்குகளில் தன் கவிப்புலத்தை வெளிப்படுத்தி, நல்லூரில் கம்பன் விழா அரங்கில் கவியால் பலர் மனங்களைக் கவர்ந்து பாராட்டைப் பெற்றவர்.

கொழும்பு றோயல் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், நவாலி அரசடி மகாவித்தியாலயத்திலும் நல்லாசிரியராக மிளிர்ந்த வேளை, கவி நாடக நெறியாள்கையால் பல நாடகங்களை மேடையேற்றியதோடு, இலங்கை வானொலிக் கலைஞராக '*கங்கையாளே*' எனும் மெல்லிசை முதல்இசைத்தட்டில் தன் பாடல்களைப் பதித்ததை இன்றும் கேட்டு ரசிக்கும் ரசிகர் கூட்டமே சாட்சியம் பகரும்.

*'பாடு படு நண்பா,*
*பரிசு தரும் பூமி'* என்ற பாடலில் சுவையோடு, தொலைக்காட்சி, வானொலி தளங்களையும் நன்கு பயன்படுத்திய கலைஞர்தான் பா.சத்தியசீலன் அவர்கள். அவரது படைப்பின் சிறப்புக் கூறும் "பா" எனும் தொகுப்பும், 1989இல் வெளியான 'அல்லைப்பிட்டிபதி அருளப்பர் அம்மானை' என்ற நூலும் சிறந்த இலக்கியப் பதிவுகளாகும்.

### யோசப்பாலா

மொழி வளமும், கவிச்சுவையும் சத்தியசீலனின் பெரும் சொத்து. விடாமுயற்சியுடன் அச்சுக் கலை ஆர்வமும், ஓவியர் ரமணியின் நட்பும் அவர் வெளியீட்டை மெருகூட்டும் பண்போடு பேசும் பேச்சுகள், 'நாச்சியார்', 'குஞ்சு', 'ராசன்', 'ஐயா' என பழந்தமிழ் சுவைகலந்த உறவாடல் பாவலனின் நட்புக்கு தனிச் சிறப்பாகும்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் 'பாவலன்' சத்தியசீலனாக அவரைக் கௌரவப்படுத்தி மகிழ்வித்தது. இது போன்ற பலரது பாராட்டுக்களைத் தன தாக்கிக்கொண்டாலும், படைப்பாளிகளை எம் மண் சரியான முறையில் இனங்கண்டு ஊக்குவிப்பதில் பின் நிற்பது, எதிர்காலத்தில் இலக்கிய வறுமையைத்தான் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வழிபிறக்கும்.

கட்டடங்களைக் கட்டி வளர்ப்பதை விட கலையார்வம் மிக்க நூல்களை வெளியிடத் தூண்டுவது சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும். ★

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*அன்னை மடியில் (இலங்கை)* *04 - 07 - 1971*



*ஆண்டவன் அடியில் (லண்டன்)* *21 - 06 - 2001*

## அமரர் பவானந்தன் சண்முகானந்தன் (கண்ணன்)

*(மின்இணைப்புப் பொறியியலாளர், லண்டன் (U.K))*

பாசத்தின் உறைவிடமே!
உறவுகளைக் காணத் துடித்தவனே!
காணாது சென்றது ஏன்? ஐயா!
உமது அன்பு, அறிவு, ஆற்றல்
அனைத்தையும் தாங்கி
மீண்டும் இம் மண்ணில் வருகவே!

லண்டனில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த அன்னாரின் மரணச்செய்தி கேட்டு எம்துயரில் கலந்துகொண்டு, இங்கு நடைபெற்ற இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதோடு -

நாளை (05-08-2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*


(C/17833)

- குடும்பத்தினர்.

# தென்மராட்சி விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க முடியாதா?

வடமாகாணத்தில் தென்மராட்சி பரந்த பெரியவிளை நிலத்தை உள்ளடக்கிய விவசாயப் பூமி. கிழக்கே பச்சிலைப்பள்ளி வரை நீண்ட பெரிய தென்னந்தோப்புகள். தெற்கே பூநகரி கடல் நீரேரி எல்லை வரை தனங்களப்பு, மறவன்புலோப் பகுதி ஆறாயிரம் ஏக்கர் நிலமுடைய நெல்வயல்கள், தென்னந்தோப்புகள், மேற்கே கைதடிப் பிரதேசம் பெருந்தோட்ட விவசாய பூமி. வடக்கே வரணி வரை தோட்ட நிலப்பரப்பு.

கடந்த ஒன்றரை வருடமாக இந்




நிலங்கள் காடு மண்டிக் கிடக்கின்றன. இங்கே முன்னர் உற்பத்தியான உணவுப் பொருள்கள் யாழும் வடபகுதித் தேவையைப் பெருமளவு பூர்த்திசெய்து வந்தன.

இன்று தேங்காய், மரக்கறி விலைகள் உச்சத்தில் போகின்றன. கப்பலில் அரிசி, மா வரவில்லையானால் யாழ்ப்பாண மக்களின் கதி அதோகதிதான்.

இந்த விவசாய நிலங்களை உற்பத்தி செய்த - அதை நம்பி வாழ்ந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கானோர் இப்போது அரசு வழங்கும் நிவாரணத்தை நம்பி வாழ்பவர்களாகவும், தமது தேட்டங்களை விற்று சீவியம் நடத்துபவர்களாகவும் வாழும் நிலை வழமையாகிவிட்டது. நிவாரணத்துக்கு வழங்கப்படும் தரம் குறைந்த அரிசியை உண்டு அவர்கள் வெறுப்படைந்து போனார்கள்.

தென்மராட்சி தெற்கில் உள்ள தனங்களப்பு - மறவன்புலோ வயல்கள் சுமார் ஆறாயிரம் ஏக்கர். இங்கே உற்பத்தியான நெல் முன்பு வடபகுதியின் அரை ஆண்டுத் தேவையைப் பூர்த்திசெய்து வந்தது. எஞ்சிய நெல் வன்னியில் இருந்து வந்ததாகச் சொல்வர். இன்று கப்பலில் வரும் தரம் குறைந்த - மட்டரக - அரிசி மக்கள் வாழ்வைப் போக்குகிறது.

வரும் காலபோக நெற்செய்கையுடன் சேர்த்து கடந்த மூன்றாண்டு காலம் நெல்வயல்செய்கை பண்ணப்படவில்லை. மேலும் இந்த விவசாய மக்கள் மீளக்குடியேற உகந்த சூழ்நிலை இல்லை. அனுமதியும் இல்லை. மிதிவெடிகள் அகற்றப்பட மேலும் காலம் போகலாம்.

இந்நிலையில் நெல் வயல்களை நம்பி, தென்னை வருமானத்தை, விவசாயத்தை நம்பி வாழ்ந்த குடும்பங்களின் எதிர்கால நிலை என்னவாகும்? வெளிநாட்டு உறவினர் உதவிகளும், வேறு வருமானமும் அற்ற பல குடும்பங்கள் எப்போது நாம் எமது சொந்த மண் சென்று, எமது வழமையான தொழிலைச்செய்து, நிம்மதியாக வாழ்வோம் என ஏங்கியவாறு உள்ளன.

இந்த மக்களின் துயர் போக்க இந்த விவசாயிகளுக்கு உடன் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மீது அக்கறையுள்ள அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் இந்த விவசாயிகளின் நிலையை உணர்ந்து - அவர்களுக்கு மாதாந்த உதவி நிதி ஒன்றை வழங்க உடன் ஆவன செய்ய வேண்டும்.

### மாணிக்க லீலா விநோதன்

இவர்கள் தமது நிலங்களில் மீளக் குடியேறி, நெல் உற்பத்தியையோ அன்றி வேறு எந்த விவசாய உழைப்பையோ செய்யும் நிலை இந்த ஆண்டும் இல்லாது இருப்பதால் இதை உணர்ந்து விவசாயிகள் துயர் போக்க உரியவர்கள் ஆவன செய்வார்களா? *

# யுத்தத்தை யுத்தத்தால் தீர்க்க முடியாது!

**பிரபாகரனின் புலனாய்வுப் பணிகள் மிகவும் முன்னேற்றமானவை. புலிகள் தாக்குதல்களை மேற்கொண்ட வேளை விமானநிலையத்தில் வெளிநாட்டு விமானங்கள் எதுவுமில்லை. தனது புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல்களைத் திரட்டி, துல்லியமான திட்டங்களை வன்னிக் காட்டுக்குள் இருக்கும் பிரபாகரனால் தீட்ட முடியுமாயின் விமானத் தளத்தை எம்மால் காப்பாற்ற முடியாதுபோனதேன்? என்று கேள்வி எழுப்புகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக. 29-07-2001 திகதிய ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

## கட்டுநாயக்காத் தாக்குதல் உணர்த்தும் பாடம் இதுவே

*கேள்வி:-* விடுதலைப் புலிகள் யுத்தத்தின் மூலம் நாட்டிற்கு ஒரு செய்தியை விடுத்துள்ளனர். அண்மையில் அவர்கள் கட்டுநாயக்காவில மேற்கொண்ட பாரிய தாக்குதல் மூலம நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்துள்ள செய்தியை எவ்வாறு அனுமானிக்க முடியும்?

**பதில்:-** 1983 கறுப்பு ஜூலையை நினைவு கூரும் முகமாகவே இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொணடனர் எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த ஜூன் மாதம விமானப்படை யாழ்ப்பாணத்தில் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும் என நான் நினைக்கின்றேன். அதை அடுத்து விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை விடுத்தனர். அந்த விமானத்தாக்குதல்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனவும், இவ்வாறான தாக்குதல்களால் சமாதானப் பேச்சுக்களில் பின்னடைவுகள் ஏற்படும் எனவும், இவ்வாறான தாக்குதல்கள் தொடருமாயின் தாங்கள் அதற்குப் பதிலளிக்க (பதிலடி கொடுக்க) நேரிடும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்தனர். அந்தப் பதில்தான்(பதிலடிதான்) கட்டுநாயக்காவில் கிடைத்துள்ளது.

*கேள்வி:-* இந்தத் தாக்குதலை நாங்கள் எவ்வாறு எடுத்துக்கொள்ளலாம்? (புரிந்துகொள்ள முடியும்)

**பதில்:-** யுத்தத்தை யுத்தத்தின் மூலம் வெற்றிகொள்ள முடியாது. இதற்கு அரசியல் தீர்வே தேவை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்துள்ளார்கள்; பிரபாகரனின் படையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது என மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் அத்தனையும் இந்தத் தாக்குதல் மூலம் பொய்யாக்கப்பட்டுள்ளன. அரசு சமாதானத்திற்கு தயார் எனில் தாங்களும் தயார் என விடுதலைப் புலிகள் எப்போதும் கூறி வருகின்றனர். அரசு யுத்தத்திற்குத் தயார் எனில் தாங்களும் தயார் எனக் கூறினர்.

*கேள்வி:-* கட்டுநாயக்கா தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகப் பாரிய பிரச்சினை உருவாகியுள்ளது. நாட்டின் பாதுகாப்புக் குறித்து நீங்கள் எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?

**பதில்:-** இந்தத் தாக்குதலை அவதானிக்கும் போது நான் புதுமையடைகிறேன். 4மணித்தியாலங்களுககுள் எமது விமானப்படைத் தலைமையகத்துக்குள்ளும், விமானநிலையத்துக்குள்ளும் ஊடுறுத்துப் புலிகள மேற்கொண்ட அழிவுகள் வியப்பில் ஆழ்த்துகின்றன. தற்போது வெளிவந்துள்ள தகவல்களின்படி 15 புலிகளே தாக்குதலை மேற்கொள்ள வந்துள்ளனர். இந்தப் 15பேர் விமானப் படைக்குச் சொந்தமான 8 விமானங்களையும், சிறிலங்கா 'எயர்லைன்' நிறுவனத்திற்குச் சொந்தமான 3 எயர் பஸ்களையும் முற்றாக அழித்துள்ளனர். மேலும் 3 எயர்பஸ்களுக்கு பாரிய சேதங்களை விளைவித்துள்ளனர். அதி உச்ச பாதுகாப்பு வலையத்திற்குள் வந்து புலிகள் எவ்வாறு தங்கள் திறமைகளைக் காட்டினார்கள் என்பதே பாரதூரமான வினாவாகும்.

*கேள்வி:-* பாதுகாப்பு தயார்நிலையில் இருந்திருக்கவில்லை என்ற கேள்வி எழுகிறதா?

**பதில்:-** ஆம். தயாராய் இருந்திருக்கவில்லை என்பது தெரிகிறது. விமானப்படையின் பிரதான முகாமைப் பாதுகாக்கும் திட்டம் இராணுவத்திடம் இருக்க வேண்டும். இந்தத் தாக்குதலின் போது புலிகள் 12 றொக் கட்டுக்களுக்கு மேல் பயன்படுத்தவில்லை. ரவைகளை நூற்றுக்கணக்கில் பாவித்துள்ளனர்.

*கேள்வி:-* இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புக்களின் பெறுமதி எவ்வளவாக இருக்கும்?

**பதில்:-** அமைச்சர் அனுர பிரயதர்ஷன யாபா, அழிவுகளின் பெறுமதி 3ஆயிரம் கோடி(30 பில்லியன்) எனத்தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கு மேலாக இருக்கும். எண்ணெய்க்குதங்கள், ஆயுதக் களஞ்சியங்கள் ஆகியனவற்றிற்கு ஏற்பட்ட அழிவுகள் மதிப்பீடு செய்யப்படவில்லை. 'சிறிலங்கன் எயர்லைன்' நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து இறுதி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அழிக்கப்பட்ட 'கிபீர்' விமானம் ஒன்றின் விலை 45 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அவற்றில் 2 விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எம்.ஐ.17 ரக ஹெலி ஒன்று அழிக்கப்பட்டுள்ளது. இதன் விலை 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். எம்.ஐ.24 ரக ஹெலியின் விலை 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் கள் ஆகும். புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட கே.8 ரக பயிற்சி விமானங்கள் 3 அழிக்கப்பட்டுள்ளன. இந்த விமானம் ஒன்றின் விலை 3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இவை விமானப்படைக்கு ஏற்பட்ட அழிவுகள். 3எயர் பஸ்கள் அழிக்கப்பட்டதால் 'சிறிலங்கன் எயர்' நிறுவனத்துக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் திருத்தக் கூடிய விமானங்களுக்கு அவற்றைத் திருத்த ஏற்படும் செலவுகள் மதிப்பீடு செய்யப்படவில்லை.

*கேள்வி:-* இந்த விமானங்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் அவற்றுக் கான நஷ்ட ஈடு கிடைக்கும் என அரசு கூறுகிறதே?

**பதில்:-** யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படும் வான்கலங்களுக்கு வழக்கமாகக் காப்புறுதி கிடைப்பதில்லை. "சிறிலங்கன் எயர்" நிறுவனத்திற்குச் சொந்தமான விமானங்களுக்கு பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்படும் அழிவுகளுக்கும் சேர்த்து காப்புறுதி செய்யப்பட்டால் மாத்திரமே நஷ்ட ஈட்டைப் பெறமுடியும். மேலும் இந்த விமானங்கள் வங்கிகள் ஊடாகவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. எனவே நஷ்டஈடு கிடைக்கினும் அது வங்கிக்கே கிடைக்கும்.

### பாகிஸ்தான் ஆதரவு தருமா?

*கேள்வி:-* பாகிஸ்தான் எமது நாட்டிற்கு உதவி செய்யவுள்ளதாகச் செய்திகள் அடிபடுகின்றனவே?

**தமிழில் சுஜனி**

**பதில்:-** பாகிஸ்தானிடமிருந்து சிறு சிறு உதவிகள் கிடைக்கலாம். அவையும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே. சில சர்வதேச மாநாடுகளில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மோதல்கள் உருவாகும் வேளைகளில் பாகிஸ்தானை ஆதரிப்பது என்ற நிபந்தனைக்கு சிறிலங்கா ஒத்துக்கொண்டால் மாத்திரமே மேற்கூறப்பட்ட சிற்சில உதவிகளும் கிடைக்கும். அவ்வாறெனில் இந்தியா எம்முடன் பகைமை பாராட்டும். இந்தியாவைப் பகைத்துக்கொண்டு ஒரு போதும் எந்தப் பிரச்சினைக்கும் நாம் தீர்வினைக் காணமுடியாது.

*கேள்வி:-* இன்னும் 2வாரங்களுக்குள் புதிய விமானங்கள் விமானப்படைக்குக கிடைக்கும் என அரச உயர்மட்டத்தில் கூறப்படுகிறதே?

**பதில்:-** இரண்டு கிழமைக்குள் கிடைக்கும் என எனக்குத் தெரியாது. பாகிஸ்தான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இருந்து மாத்திரமே கடன அடிப்படையில் எங்களால் கொள்வனவு செய்ய முடியும். ஆனால் பல்வேறு நிபந்தனைகள், அதிகமான வட்டி ஆகியவற்றின் அடிப்படையிலேயே கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும். ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆகியன பொருள் ரீதியான உதவிகளை எமக்கு வழங்க முன்வரமாட்டா.

*கேள்வி:-* தாங்கள் தாக்குவோம் என விடுதலைப் புலிகள் முன்கூட்டியே அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். இது குறித்து அரசும், பாதுகாப்புத் துறையினரும் அதிக கவனம் செலுத்தவில்லை. இவ்வாறு செயற்பட்டதற்கு காரணம் அரசைச் சேர்ந்த சிலர் விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பீடு செய்ததே எனக் கூறமுடியுமா?

**பதில்:-** ஆம். முற்றிலுமாக அது சரியே. புலிகள் விமானத் தளத்தில் இருந்த விமானங்களில் தங்கள் மீது தீவிர தாக்குதல்களை மேற்கொண்ட விமானங்களையே முதலில் அழித்துள்ளனர். 'மிக்', 'கிபீர்', 'எம்.ஐ.' வான்கலங்கள் மீதே தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இது மிகவும் திட்டமிடப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கையாகும். இதனால் விமானப்படையின் தாக்குதல் ஆற்றல் 20 சதவீதம் குறைந்துள்ளது. "சிறிலங்கன் எயர்" நிறுவனத்தின் போக்குவரத்து சேவைகள் 40 சதவீதத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவை குறித்து நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

*கேள்வி:-* இந்த யுத்தத்திற்கு யுத்தத்தால் முடிவு காணப்பட வேண்டும் எனக் கூறுபவர்களுக்கு தங்களின் பதில் என்ன?

**முன்னாள் தளபதி ஹரிகுணதிலக பேட்டி**

**பதில்:-** யுத்தத்தை யுத்தத்தால் வெல்ல முடியாது என்பதற்கு மற்றொரு உதாரணமே கட்டுநாயக்கா தாக்குதலாலும் முப்படைகளாலும் புலி[illegible]களைத் தோற்கடிக்க [illegible] அதே போலவே, புலி[illegible] முப்படைகளையும் தோற்கடித்து தனி நாடொன்றை உருவாக்க முடியாது. இரு தரப்பாரும் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கும் போது நாடு அழிந்து கொண்டே போகும். நாடு அழிவதா அல்லது நல்ல உடன் பாட்டைக் காண்பதா நல்லது? சில நாடுகளில் இவ்வாறான யுத்தம் 50 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துள்ளது; நீடித்துவருகிறது.

### அரசுக்குள்ள வழி என்ன?

*கேள்வி:-* தற்போது அரசுக்கு எஞ்சியுள்ள மாற்றுவழி தான் என்ன?

**பதில்:-** சமாதானப் பேச்சுக்களுக்கு அரசு செல்ல வேண்டும்.

*கேள்வி:-* எமது நாட்டின் புலனாய்வுத்துறையின் பலவீனம் குறித்து எப்போதும் விமர்சிக்கப்படுகிறது. இதில் முன்னேற்றம் காணமுடியாமல் இருப்பது ஏன்?

**பதில்:-** முன்னேற்றாத காரணத்தாலேயே முன்னேறாமல் உள்ளது. பாருங்கள், 15 புலிகள் இரவோடு இரவாக விமானப்படைத் தளத்திற்குள் நுழைந்து, 4 மணித்தியாலம் தாக்குதல்களை மேற்கொள்ளும் வரை, படைகளும் புலனாய்வுத் துறையினரும் என்ன செய்து கொண்டிருந்தனர்? இவை குறித்து எனக்கு மிகவும் வேதனையாகவும், வெட்கமாகவும் இருக்கிறது. பிரபாகரனின் செயற்பாடுகளை நான் கண்டிக்கிறேன். ஆனால் அவரது புலனாய்வுப் பணிகள மிகவும் முன்னேற்றமானவை என்றே கூற வேண்டும். புலிகள் தாக்குதலை மேற்கொண்ட வேளை, விமான நிலையத்தில் எந்தவொரு வெளிநாட்டு விமானமும் தரித்திருக்கவில்லை. இதனால் வெளிநாட்டு விமானங்களுக்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படவில்லை. புலனாய்வுப் பிரிவின் மூலம் தகவல்களைப் பெற்று, சிறந்த திட்டங்களைத் தீட்ட வன்னிக்காட்டிற்குள் இருக்கும் பிரபாகரனால் முடியுமாயின், எம்மால் எமது விமானப் படைத் தளத்தை ஏன் காப்பாற்ற முடியால் போயிற்று?

*கேள்வி:-* தமது நாட்டு உல்லாசப் பிரயாணிகளை சிறிலங்காவுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. எதிர்காலத்திலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறும் எனக்கிடைத்த தகவல்களின் அடிப்படையிலா அமெரிக்க அரசு இப்படி அறிவித்துள்ளது?

**பதில்:-** நான் அவ்வாறு நினைக்கவில்லை. கடந்த வாரம் இடம் பெற்ற அரசியல் குழப்பங்கள் (ஆர்ப்பாட்டங்கள்) காரணமாக அமெரிக்க அரசு இவ்வாறு தீர்மானித்திருக்கலாம்.

### 'றோ'வுக்குத் தொடர்பா?

*கேள்வி:-* கட்டுநாயக்கா தாக்குதலுக்கும் இந்திய உளவுப் பிரிவான 'றோ'வுக்கும் தொடர்புகள் உள்ளன என அரசைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனரே?

**பதில்:-** ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர், விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் அதிக தொடர்புகள் இல்லை. தொடர்புகள் ஏதாவது இருப்பின் அது தமிழ் நாட்டுடன் மாத்திரமே இருக்கும். புதுடில்லியுடன் எதுவிதத் தொடர்புகளும் இல்லை. எனவே 'றோ' பற்றிய செந்திகள் பொய் என்பதே எனது கருத்தாகும்.

*கேள்வி:-* எமது அரசு அரசியல் தேவைகளுக்காக யுத்தத்தை மேற்கொள்கிறது என சில இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதுவே இவ்வாறான தாக்குதல்களுக்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. இது குறித்து தங்கள் கருத்து என்ன?

**பதில்:-** அதை நானும் ஏற்கிறேன். தேர்தல் நெருங்கும் போது எதிர்க் கட்சியினருக்கு 'புலிகள்' என நாமம் சூட்டி, அரசாங்கம் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறதே தவிர, வேறு திட்டங்களின்படி யுத்தத்தை மேற்கொள்ளவில்லை. மாகாண சபை, பிரதேச சபை, பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய ஒவ்வொன்றும் நடை பெறுவதற்கு முன்னர் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'ரணகோஷ -1' இல் இருந்து 'ரணகோஷ - 5' வரையான இராணுவ நடவடிக்கைகள் தென்பகுதி மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கே மேற்கொள்ளப்பட்டனவே தவிர, யுத்தத்தில் வெற்றிபெறும் நோக்கத்துடன் அல்ல. அரசாங்கம் எதிர்பார்த்த விதத்தில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேற்கொண்ட இந்த 5 இராணுவ நடவடிக்கைகளின் போது கைப்பற்றிய பிரதேசங்களை விடுதலைப் புலிகள் மூன்றே மூன்று நாள்களில் மீண்டும் கைப்பற்றினர். இதன் காரணத்தாலேயே நாங்கள் அரசியல் மூலம் பூசப்பட்ட யுத்தத்தை எதிர்க்கிறோம். ஏன் இந்த அரசு சிப்பாய்களின் உயிருடனும் நாட்டுடனும் விளையாடுகிறது?

*கேள்வி:-* தற்போது அவசரகாலச சட்டம் இல்லாதபடியால் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏதாவது பாதிப்புகள் உள்ளனவா?

**பதில்:-** சில அமைச்சர்கள் இம்மாதிரிப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர். யுத்தத்தை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவை என முன்னாள் விமானப்படைத் தளபதி என்ற வகையில் நான் பொறுப்புடன் கூற விரும்புகிறேன். கட்டுநாயக்கா விமானத் தளம் மீது புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டபோது, அதைத் தடுப்பதற்கு அவசரகாலச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டுமா? இவை யாவும் வெறும் பகிடிக்கதைகளே. நான் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவன் அல்லன். இவ்வாறான பிரசாரங்கள் எதிர்க்கட்சிக்குச் சேறு பூசுவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. சரத் அமுனுகம, அனுரா பிரியதர்ஷன யாபா, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அனுருத்த ரத்வத்த ஆகியோர் மேற்கொள்ளும் இவ்வாறான பிரசாரங்களை நான் நிராகரிக்கின்றேன். இவர்கள் தங்களைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறு செயறபடுகின்றனர். இதன் மூலம் அரசுக்கோ ஜனாதிபதிக்கோ எதுவித பயனும் இல்லை.

*கேள்வி:-* கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் காரணமாகவே, கட்டுநாயக்கா தாக்குதல் இடம்பெற்றது என அமைச்சர்கள் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்ற மக்கள் கூட்டத்துடனேயே புலிகளும் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனராமே?


ஹரி குணதிலக

**பதில்:-** இது ஒரு மகா பொய்க் கூற்றாகும். இவற்றிற்குப் பதிலளிக்க முடியாது. பதிலளிக்கப் பெறுமதியற்ற வினா இது. இவற்றைக் கேடுகெட்ட பிரசாரம் என்றே கூறவேண்டும். பாதுகாப்புத் துறையின் பலவீனத்தை மூடி மறைக்க நாட்டையே குழப்புவது தவறான செயலாகும்.

*கேள்வி:-* கட்டுநாயக்கா தாக்குதல்களைத் தொடர்ந்து அரச செய்தி யூடகங்கள் செயற்பட்ட விதத்தைத் தாங்கள் அவதானித்தீர்களா?

**பதில்:-** ஓரளவு கீழ்த்தரமானவை. ஐயோ சரியான துக்கம். கட்டுநாயக்கா மீது தாக்குதலை மேற்கொண்டவர் பிரபாகரன் ஆவார். ஆனால் அந்தத் தாக்குதலை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட மாதிரி அல்லவோ அரச செய்தி யூடகங்கள் கூறுகின்றன. இவற்றை என்ன என்று கூறலாம்? இதைப் பற்றிக் கூற சொல்லே இல்லை.

*கேள்வி:-* இந்தத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புக்கள் பற்றி?

**பதில்:-** பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு யுத்தச் செலவாக 6 ஆயிரத்து 300கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா தாக்குதல் காரணமாக மூவாயிரம் கோடி ரூபா (அரசின் மதிப்பீட்டின் படி) 4 மணித்தியாலத்தில் அழிக்கப்பட்டுள்ளது. மொத்த யுத்தச் செலவினத்தின் அரைவாசி அழிக்கப்பட்டுவிட்டது. எனவே மதிப்பீடு செய்யப்பட்ட யுத்தச் செலவினத்திற்கு தற்போது மேலதிகமாக மூவாயிரம் கோடி தேவைப்படுகிறது. இதை ஈடுகட்ட வெளிநாடுகளில் வட்டிக்கு கடன் எடுக்க வேண்டியுள்ளது.

*கேள்வி:-* இவை யுத்தம் தொடர்பான இழப்புக்கள். ஏனைய துறைகளில் பொருளாதாரப் பாதிப்புகள் இல்லையா?

### உல்லாசப் பயணத்துறை பாதிப்பு

**பதில்:-** ஏன் இல்லை. உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஆபத்தான நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவார்களா? இன்னும் இரண்டு மாதங்களில் இந்நாட்டில் சுற்றுலா சீசன் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவில் பாதிப்படையும். இதனால் இந் நாட்டிற்குக் கிடைக்கவுள்ள கோடிக் கணக்கான வெளிநாட்டுச் செலாவணியை இழக்க நேரிடும்.

*கேள்வி:-* உடனடியாக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மீண்டும் விமானநிலையத்தை வழமைக்குக் கொண்டு வந்தது தொடர்பாக அமைச்சரவை ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளது. இது குறித்துத் தாங்கள் என்ன கூறினீர்கள்?

**பதில்:-** எதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்? புலிகள் தாக்குதல்களை நடத்தித் தேவையான அழிவுகளை மேற்கொண்ட பின்னர் இயல்பாகவே நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் தானே? இதற்குப் புதிதாக எவரும் வேண்டுமா? இப்படியான அரசியல் விடயங்களைக் கதைக்க நான் விரும்பவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சீ.ஈ. பரீட்சைக் காலத்தில்

# மின்னைச் சிக்கனமாகப் பயன்படுத்த கோருகின்றது யாழ்.மின்சார சபை

ஜி.சீ.ஈ பரீட்சைக் காலத்தில் மாணவரின் கல்வி வசதி கருதி மின்னை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சார சபையின் யாழ்.அலுவலகம் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அலுவலகம் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான தற்போதைய மின்வலு அளவு 18MW ஆகும். ஆனால் 10MW அளவே பெறக்கூடியதாக இருக்கிறது. இதனால் சுழற்சி முறையில் இரவு 10.30 மணிவரை மின்வெட்டை அமுல் நடத்தக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தருமிடத்து இரவு நேர மின்வெட்டை மேலும் குறைக்கலாம். ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் நன்மை கருதி பொதுமக்கள் ஒத்துழைப்பு தருவார்களென நம்பப்படுகின்றது.

இரவு 10.30 மணிவரை அலங்கார விளக்குகள், வீட்டுக்கு வெளிப்புறங்களில் இடப்படும் மின்விளக்குகள் ஆகியவற்றை அணைத்து வைப்பதன் மூலமும் அதிஉச்ச பாவனை உள்ள நேரமாகிய இரவு 7.00 மணி முதல் 10.30 மணிவரை மின் அடுப்புகள், குளிர்சாதனப் பெட்டிகள், டெக், மின் பம்பிகள், மோட்டர்கள் போன்ற கூடுதல் மின்சாரத்தை உள்வாங்கும் சாதனங்களைப் பாவிப்பதை தவிர்த்துக் கொள்வதன் மூலமும் ஒத்துழைப்புத் தாருங்கள்.

மின்பாவனையாளர்களே, மின் பாவனை கூடுவதற்கு மற்றைய ஒரு காரணம் சட்டவிரோத மின்பாவனை ஆகும். இதனால் மின் வீண்விரயமாவதுடன் சட்டபூர்வமான மின்பாவனையாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே அக்கம் பக்கம், அயல்களில் சட்ட விரோத மின்பாவனை பெறின் அதனைத் தடுத்து நிறுத்துங்கள் அசிரத்தையாயிருப்பது உங்களையே பாதிக்கின்றது.

அதிஉச்சப் பாவனை நேரமாகிய இரவு 7.00 மணி முதல் 10.30 மணிவரை மூன்று மின் விளக்குகளையே எரியவிடுங்கள். கூடுமானவரை புளோரசன் ரியூப் லைட்டுகள், குறைந்த மின்பாவனை விளக்குகளைப் பாவியுங்கள்.

எமக்கும் உதவி உங்களுக்கும் உதவுங்கள். கல்விச் செல்வம் வளர மனதார இரவு 7 மணிமுதல் 10.30 மணிவரை மின்பாவனையை குறையுங்கள். எமது பிள்ளைகளின் கல்வி தான் எம்மக்களின் ஆணிவேர். எமது பிள்ளைகளின் கல்விக்கு உதவுங்கள் - என்றுள்ளது. (ஜ-3)

# சங்கானை அகதி முகாமின் குடிசைக் கூரைகள் சேதம்

## புனரமைக்குமாறு கோரிக்கை

மூளாய்,ஓக.4

சங்கானைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களின் ஓலைக் குடிசைகள் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளன. இவற்றைத் திருத்தி அமைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி வலி.மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இடங்களுக்குச்சென்று மீளக் குடியமர முடியாமல் உள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் மேற்படி அகதி முகாம்களில் தங்கியுள்ளன.

இவர்களுக்காக அமைக்கப்பட்ட ஓலைக்குடிசைகளின் கூரைகள் நீண்டகாலமாக வேயப்படாமல் மோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளன.

விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் பருவ மழையினால் இக்குடிசைகளில் மக்கள் குடியிருக்க முடியாத நிலை தோன்றும் என்றும் -

எனவே இவற்றைப் புனரமைப்புச் செய்து தரும்படியும் -

வலிகாமம் மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-99)

### சத்துணவுத் திட்டம் ஆரம்பம்

காரைநகர்,ஓக.4

காரைநகர் பகுதியில் உள்ள பாடசாலைகளில் தரம் I இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காரைநகர் கலாநிதி ஆதியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் வித்தியாலய உபஅதிபர் எஸ்.குமாரவேல் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா மாணவர்களுக்கு சத்துணவை வழங்கித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ஜ-73)

### கட்டடம் புனரமைப்பு

மூளாய்,ஓக.4

தொல்புரத்தில் உள்ள கமநல அபிவிருத்தி நிலையத்தின் கட்டடம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இப் புனரமைப்பு வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. மிகவிரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.(ம-99)

### நன்கொடை

பளைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 15 சனசமூக நிலையங்களுக்கான இவ்வருடத்துக்குரிய சனசமூக நிலைய நன்கொடை பளைப் பிரதேச சபைக்குக் கிடைத்துள்ளது. 'ஏ' தரத்தில் உள்ள 11 சனசமூக நிலையங்களுககும் 'பி' தரத்தில் உள்ள 4 சனசமூக நிலையங்களுக்குமே நிதி கிடைத்துள்ளது. (ஜ-117)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருள்மிகு

**பழம்பிள்ளையார், திருமுருகன், கருமாரி அம்பாள் தேவஸ்தானம், மல்லாகம்.**

எமது ஆலய அபிவிருத்தியில் அக்கறைகொண்டு அதன் புனருத்தாரணப் பணிக்கு ஏற்கனவே அளித்த நிதியை விட தற்போது ரூபா 5 லட்சம் ஒதுக்கீடு செய்து அதில் முதற்கட்டமாக ரூபா 2 1/2 லட்சத்தை உடன் வழங்கியுதவியமைக்காக,



வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

கௌரவ

**கா.வே.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்

இந்நிதியைப் பயன்படுத்தி அமைக்கப்படவிருக்கும் தேர்முட்டிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு கட்டடப் பணியை ஆரம்பித்து வைத்த



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான

**உயர்திரு.க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**

அவர்களையும்



எமது ஆலயத்தின் நிலையைப் பார்வையிட்டு அதனைப் புனரமைக்க வேண்டியதன் தேவையைத் தமக்கு எடுத்துக்கூறி நிதிஒதுக்கீட்டிற்கு உறுதியான ஒத்தாசை புரிந்த வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி அமைப்பாளருமான

**உயர்திரு.தி.சிவகுமார் (வேலு)** அவர்களையும்

**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதோடு அழிந்துபோன எம் தேசத்தைக் கட்டியெழுப்பும் இவர்களின் தளராத விடாமுயற்சி வெற்றிபெற எல்லாம் வல்ல பழம்பிள்ளையார், திருமுருகன், கருமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.**

*காங்கேசன்துறை வீதி, மல்லாகம்* (90769)

பழம்பதி தேவஸ்தான சபை.



## சோதிடம்

*கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் துல்லியமாகக் கணித்தும், எழுதியும் கொடுக்கப்படும். எண்சோதிடம், திருமணப் பொருத்தம் என்பனவும் பார்க்கப்படும்.*

*சோதிடர்*

**நாகலிங்கம் கந்தையா**

சதுர்ஷிகா ஜோதிட நிலையம்

*சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.*

(90476)


## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று பதினொராம் திருவிழா)

### வேண்டும் வரம் தந்திடய்யா!

*ஆடிவரும் மயிலேறு ஆறுமுக முருகா – எம்*
*அவலங்கள் அடியோடு அவனியிலே – மறைய*
*கோடி எழில் கொண்டகோமகனே முருகா – நினை*
*நாடியொரு வரம் வேண்டி நாமுமிங்கே – உருக*
*தேடியுனை சரணடைந்தோம் தேசமது – விடிய*
*பாடியுனை பணிகின்றோம் நின்பாத மலர் – நனைய*
*வேலெடுத்து வீசிடய்யா! வேண்டும் வரம் தந்திடய்யா!!*

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### அழகிய செந்தமிழ் முருகோனே!

குறமா மகளொடு தேவமகள்
குலவிடு பாகமார் குமரேசா!
நறுமாங் கனிபெற மயில் மீது
நானிலம் வலம்வரு வடிவேலா!
அறுமா முகத்தாய் அயில்வேலா
அழகிய செந்தமிழ் முருகோனே!
பெறுமா றுன்னருள் தருவாயே
புகழ் பெறு நல்லூர்ப் பெருமானே!

- நா.நல்லதம்பி
மட்டுவில்.

### துணிந் தெமக்கு அருள்தா!

தமிழரின் துணையே சண்முக வடிவே
சரவண பவனே சாந்தனே!
அமிழ்தனே அழகா அடியவர்க் கெளியா
அப்பனே நல்லூர்க் கந்தா!
குழகனே குமரா குடிகுடி எமக்குக்
குறைவிலா நிறைவைத் தரவா
பழமெனப் பற்றிப் பரவியுன் பாதம்
பணிந்தனம் துணிந்தெமக் கருள்தா

- முருகனடியான் -

### வேண்டுகோள்!

நல்லூர் விழாக்கோலம் கண்டு – ககம்
நல்கவா சண்முகா குருவேடங் கொண்டு
எல்லோர்க்கும் மனநோவிங் குண்டு – அவை
எழுந்தோட வேண்டும்உன் சுடர்வேலைக் கண்டு!

சூரனைப் போரிலே வென்றாய் – அடியர்
துன்பந் தவிர்க்கவே நல்லையில் நின்றாய்
தீரனே எங்குநீ சென்றாய் – அன்பர்
சிந்தா குலந்தீர்க்க வேண்டுமே நன்றாய்!

வ.சின்னப்பா
தனங்கிளப்பு.

### நம்பினோம் அமைதியைத் தா!தா!

பண்:- *புறநீர்மை* இராகம்:- *பூபாளம்* தாளம்:- *ஆதி*

தினை புனந் தன்னில் திருடனாய் வந்து
தேவியைத் திருடிய தீரா
உனைத் தொழ இங்கே உயரிய கோயில்
உலப்பிலா லெழிலுடன் கொண்டு
மனையிலா தோடி மண்ணை விட்டகலும்
நிலைகண்டும் நீ மன மிரங்கா (து)
திருப்பதும் ஏனோ? நல்லையின் நாதா
நம்பினோம் அமைதியைத் தா! தா!

தருகிறா யமைதி என்றுநா மென்னும்
வண்ண மாய்மாலங்கள் காட்டி
திருடனே யுனது திரு விளையாட்டை
நிறுத்திடு தாங்கிட மாட்டோம்
அருளுவாய் அமைதி அனைவர்க்கு மென்றே
அனுதினம் வேண்டினோம் முருகா!
குருவரு ளோங்கும் நல்லையின் நாதா
குறைகளைத் தீர்த்தருள் தா! தா!

- கவிமணி அன்னைதாஸன் -

| | | | |
|---|---|---|---|
| | சனி | | வெ வி யா |
| | இராசிச் சக்கரம் | | சூ ரா புத |
| சந் | | | |
| கே | செவ் | | |

**மாற்றம்:**

***05.08.2001 இல் அவிட்டம்-மகரம் இராசியில் சந்திரன் நிற்கும்.***

***07.08.2001 இல் மேடம் இராசியில் செவ்வாய் மாறும்.***

***07.08.2001 இல் மேடம் இராசிக்கு புதன் மாறும்.***

அரசியலில் வீட்டுவிட்டு அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு ஒரு முடிவுக்கு வரும். பதவிக்கு விலை பேசப்படும். தொடரும் யுத்தப் பளு மக்களைப் வெறுப்படையச் செய்யும். தலைவர்கள் சிறுபிரச்சினைகளைப் பெரிதாக்குவார்கள். தொடர் கதையாக இருக்கும். இந்தியாவில் அரசியல் குழப்பம் ஏற்படும். மேற்குலகம் பொருளாதாரச் சிக்கலைச் சந்திக்கும். பசிபிக், அத்திலாந்திப் பிராந்தியத்தில் இயற்கையில் சீற்றமும், இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் மழை-காற்று அழுத்தங்களும் இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 5-8-2001 – 11-8-2001

## மேடம்

அரிசி அவிந்து சோறான பின் எவரும் உலையை அதிக நேரம் எரித்து விறகை வீணாக்குவார்களா? காரியம் முடிந்த பின் எவரும் கருத்துடன் எதைச் செய்கிறார்கள்? என்னவேகம்? புயலாகப் பறந்து, பறந்து அலுவல்களைச் செய்து வெற்றி அடைவார்கள். புதிய நட்பு கசக்கும். மாற்றமொன்று ஏற்பட இடமுண்டு. உறவினர் கொண்டாட்டம் வரும். கண்கூச்சம், கை, கால் நாரி உளைவு. மனப்பதற்றம், வயிற்றுநோ போன்றவை வரும். பிரயாணத்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷடநாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

## மகாதேவா ஜோதிடம்

## இடபம்

வைரவரின் சூலம் கடவுளா? இரும்புக் கம்பியா என எண்ணி அதைப்பிடுங்கி- தேங்காய் உரித்தும் அதைவேறு தேவைகளுக்குப் பாவிக்கும் ஒரு சிலர் மக்களின் தெய்வ நம்பிக்கையை அழிக்க முற்படுகிறார்களா? நம்பிக்கை கொண்டுதான் இந்த உலகமே இயங்குகின்றது. எனவே, எதையும் அலட்சியப்படுத்தாமல் தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டபடி இருப்பீர்கள். ஆசார அனுஷ்டானங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள். அயலவர்கள் பொருமுவார்கள். சனித்தொல்லை, நெஞ்சுநோ, சலவருத்தம், என்பன வந்து வைத்தியம் செய்ய வேண்டி ஏற்படும். உணவு விடுதிகள், வங்கித்துறை, செய்தித்துறைகள், கணிதத் துறைகள் போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷடநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

## மிதுனம்

உலகத்தில் மனிதர்களை மனிதர்கள் பணம், பதவி கொண்டு அளக்கிறார்கள். இது இன்று நேற்று வந்த முறையா? அளவுடன் இருந்து அறிவுடன் நடந்து வெற்றி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்லவை நடக்கும். நாலுபேர் மதிப்பார்கள். அதிகாரிகள் உதவுவார்கள். தூரத்திலிருந்து நற்செய்திகள் வரும். கைகால் உரசல் காயங்கள், தலைவலி, மலச்சிக்கல்கள், களைப்பு என்பனவரும். தூரதேசச் செய்திகளால் பதற்றம் சிலருக்கு ஏற்பட இடமுண்டு. விவசாயத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை, நகைத்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.

## கடகம்

அரசியலில் என்றும் நிரந்தரமான முடிவுகளை எவரும் காண்பதில்லை. நாளுக்கு நாள் மாற்றம் அடையும் உலகில் நிதானமாக எவரும் செயற்படுவார்கள் என நாம் கருதநியாயமில்லை. பொதுத்தொண்டால் புகழ்வரும். வீடு, வாகன சுகம் கிடைக்கும். தூரத்திலிருந்து உறவினர் வர இடமுண்டு. திடீர் திடீரென மனக்குழப்பங்கள் வரும். குடும்பத்திடையே கருத்து வேற்றுமை ஏற்படும். விட்டகுறை, தொட்டகுறை தொடர்ந்து வந்து வேதனை தரும். இரத்த அழுத்தம், வயிற்று வருத்தம், சலவருத்தம் வரும். வியாபாரம், ரீ.வி, வீடியோ, சினிமாத் துறை, அரசியல்துறை, மின்சாரத்துறை, நீதித்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும்

★ அதிர்ஷட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.

## சிங்கம்

தொழில்ஸ்தானத்தில் உண்மை சொல்லி, கடினவாழ்வில் இச்சமுதாயத்திற்கு நன்மைகள் சொல்ல எண்ணும் உங்களைப் போன்றோருக்கு எவ்வளவு கஷ்டங்கள்? இடமாற்றம் உண்டு. தூரதேசச் செய்திகள் மன ஆறுதலைத்தரும். புதிய பொறுப்புக்களால் புகழ் வரும். மாற்றங்கள் நன்மை தரும். காலில் அடிபடல், படபடப்பு, வயிற்றுக் குழப்பம், கைகால் சோர்வு என்பன ஏற்பட இடம் உண்டு. பாதுகாப்புத்துறை, குருத்துறை, வியாபாரத் துறை, தரகுத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

## கன்னி

காசு என்றதும் ஏன் பாம்பை மிதித்தவர்கள்போல் சிலர் ஓடுகிறார்கள். இந்த நாட்டில் இப்பொழுது இருகால் நாகங்கள் ஆயிரக்கணக்காகப் படமெடுத்துத் திரிவதை யோசிக்கிறீர்களா? நாமுண்டு எமது தொழில் உண்டு நமக்கேன் வீன் வம்பு என விலகி நடக்க முற்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை தீமை கலந்து நடக்கும் தொழில் தஸ்தானத்தில் புதிய திட்டங்களால் உங்களுக்கு நன்மைகள் ஏற்படும். மூத்த சகோதர உதவிகளால் நன்மை கிடைக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு சுகயீனம் கொடுத்து அலைச்சல் ஏற்படும். சளி, விறைப்பு, நெஞ்சு அழுத்தம் என்பன வரும். பிரயாணத் துறை, சட்டத்துறை, இசைத் துறை, கலைத்துறை, குருத் துறை போன்றதுறையைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

## துலாம்

மனிதர்களின் களைப்பு நீங்க கலகலப்பு வேண்டும். ஆலயங்களில் திருவிழா, பிரயாணங்கள், பொருள் காட்சிகள், சமயச்சடங்குகள் போன்ற கொண்டாட்டங்கள் அவசியம் தேவையாகும். சென்று வென்று வருவீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்களால் நன்மைகள் ஏற்படும். வீடு, வாகன சுகம் அதிகரிக்கும். புதிய வருமானத்திட்டங்கள் மேலிடும். கைகால் உளைவு, வாதப் பிடிப்பு, வயிற்றுவலி, தலைவலி, நாம்பு, சலவருத்தங்கள், மனப்போராட்டம் என்பன ஏற்பட்டு வைத்தியத்தால் மாறும். விவசாயத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத் துறை, சந்தை வியாபாரம், குருத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு நல்ல வருமானம் வரும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

★ அதிர்ஷட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

## விருச்சிகம்

இந்த உலகத்தில் பொய்யர்களால் நல்லவர்களைக்கூட நம்பமுடிவதில்லை. பகலில் நல்லவர் போலத்திரியும் சிலர் இரவில் கள்ளவர்களாக மாறி நல்லவர்களுக்குப் பல துன்பங்களைச்செய்து வருகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். சிலர் மன வேதனை தருவர். உடல் நலத்தில் கவனம் தேவையாகும். அடிக்கடி பயம் ஏற்படும். இனஜனக் கொண்டாட்டம் வரும். கிழகுங் வகையால் நாரிப்பிடிப்பு வரும். வாய்வுத்தொல்லை, கண்ணில் பிறசர், வயிற்றுக் குழப்பம், கிருமித்தாக்கம், நரம்பு, சல வருத்தம் என்பன வரும். நீதித்துறை, வியாபாரத்துறை, நிர்வாகத் துறை, வங்கித்துறை, இரும்புத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் கிடைக்கும். தூரதேசச்செய்திகள் மன ஆறுதலைத் தரும்.

★ அதிர்ஷட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

## தனுசு

தெய்வபக்தி, திடசித்தம் கொண்ட உங்களைச் சிலர் ஏமாற்றுவதாக நினைக்கிறார்கள். உங்களை எவரும் ஏமாற்ற முடியாது என்ற உண்மை சிலருக்குத்தான் புரியும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். கோபத்தால் கண்டித்தாலும் அன்புடன் கண்டிக்கிறீர்கள் என மற்றவர்கள் எண்ணுவார்கள். குடும்பத்தில் புதியபொறுப்புக்கள் வரும். வீடு, வாகனயோகம் ஏற்படும். இன ஜன உதவிகள் கிடைக்கும். தூரத்துச் செய்திகளால் மனதில் சலனம் வந்தாலும் அதற்கு மாற்றுத் திட்டமிட்டு நிறைவு செய்வீர்கள். வயிற்றில் குழப்பம், வாய்வுத்தொல்லை, சல வருத்தம், நரம்புப் பலவீனம் என்பன வரும். கோயில்துறை, நீதித்துறை, அரசியல்துறை, குருத்துறை, வியாபாரத் துறை போன்றோர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷடநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

## மகரம்

ஒவ்வொரு உழைப்பாளிகளும் தமக்கென ஒரு கொள்கையை வைத்திருப்பார்கள். அதன்படிதான் மற்றவர்களின் செயற்பாடுகளும் இருக்க வேண்டும். அல்லது விலகி நடந்து கொள்ளல் வேண்டும். மற்றவர்களின் உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து நடக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களில் நன்மைகள் ஏற்படும். பொதுத்தொண்டு புகழைக் கொடுக்கலாம். பணத்தைக் கொடுக்கும் எனச்சிந்திக்க முடியாது. கை கால் உளைவு, நரம்புப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை, விறைப்பு, காய்ச்சல் என்பன கொடுக்கும். அரசியல்வாதிகள் உதவிகள் செய்து தருவார்கள். பிரயாணத்துறை, ரீ. வி., வீடியோ கொம்பியூட்டர், செய்தித்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷடநாள்கள்:- திங்கள், வியாழன்.

## கும்பம்

உணர்ச்சிவசப்பட்டு முடிவு எடுப்பவர்கள் உண்மைகளைக் கண்டறிந்து நன்மைகளை அடையமாட்டார்கள். உண்மைக்கும், உறுதிக்கும், பல நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் படிப்படியான மாற்றங்கள் கொடுக்கும். மனப் போராட்டம் எதற்காக? பந்த பாசத்திற்காக ஓடியாடித்திரிவீர்கள். சுபமங்களப் பேச்சு? காணிபூமிப் பேச்சு பல நன்மைகளைக் கொடுக்கும். கால்வருத்தம், நாரிநோ, மலச்சிக்கல், நம்புப் பலவீனம் என்பன கொடுக்கும். தொழிலில் புதிய பொறும்பு வரும். இரும்புத் தொழில், விவசாயத் துறை, பாதுகாப்புப்பகுதி, ஆசிரியத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

★ அதிர்ஷடநாள்கள்:- திங்கள், வியாழன்.

## மீனம்

உங்களிடம் பத்துத்தரம் வந்தேன் காண முடியவில்லை— உங்களை எழுவது வயதில் காண நினைத்து முயற்சித்தேன் ஆனால் எண்பது வயதில் தான் நேரடியாகக் காண முடிகிறது. இவ்வாறு கூறி விடாமுயற்சி செய்து காரியங்களை நிறைவேற்றுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதியதிட்டங்கள் கருவாகி உருவாகும். நண்பர்கள். உதவிகள் செய்வார்கள். நன்மையைச் செய்து வரச் சிலர் தடையாக இருப்பார்கள் அதற்காக நீங்கள் சில யுத்திகளைச் செயற்படுத்துவீர்கள். சமியாக்குணம், நரம்புச்சோர்வு. தலைவலி, வாதம், பித்தம், என வருத்தும். குருத்தொழில், பிரயாணத்துறை, விவசாயத்துறை, மருந்துத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷடநாள்கள்:- திங்கள். வியாழன்.

# அதிக விளைச்சல் தரும் நெல்இனம்

# இந்த ஆண்டு குடாநாட்டில் அறிமுகம்

## ஏக்கருக்கு 165 புசல் நெல் விளையும்

மூளாய், ஓக. 4

அதிகவிளைச்சல் தரக்கூடிய புதிய நெல் இனம் ஒன்று இந்த ஆண்டு பெரும்போகச் செய்கையின் போது யாழ். குடாநாட்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் தென் பகுதியில் இருந்து மேற்படி புதிய வகை நெல் இனம் எடுத்து வரப்பட்டுள்ளது. இவ் விதை நெல் தற்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

'எல். டி. — 356' என்று பெயரிடப்பட்ட இப்புதிய நெல்லினம் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 165 புசல் விளைச்சல் தரக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் சுமார் 105 நாள்கள் வயதுடைய இந்த நெல்லினம் மேட்டுப்பாங்கான வயல் பரப்புக்குப் பொருத்தமான சிவப்புசம்பா இனமாகும். இந்த நெல் இனம் இவ்வாண்டு பெரும் போகத்தின் போதுபரீட்சார்த்தமாக குடாநாட்டில் செய்கை பண்ணப்படவுள்ளது.

(ம-99)

## புல்துண்டங்கள் விநியோகம்

வடமராட்சிப் பிரதேச கால்நடைப் பண்ணையாளர்களுக்கு 'றேப்பியா' 'கினி' 'பவல்' ஆகிய இனங்களைச் சேர்ந்த புல்துண்டங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

பண்ணையாளர்கள் புல் துண்டங்களைப் பெற்றுப் பயனடையுமாறு கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி. வசிகரன் கேட்டுள்ளார்.

(ஐ-173)

## முகாமைத்துவ பயிற்சி நெறி

மூளாய், ஓக. 4

வலிகாமம் மேற்கில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் மூலமாக நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் நுண்கருத் திட்டத்தின் கீழேயே இந்த முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு அகதிகள் முகாம்களில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஆர்வம் உள்ள சுமார் முப்பது பேருக்கு இப் பயிற்சி வழங்கபபடவுள்ளது. (ம-99)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாய்க்குட்டிகள் விற்பனை

Dober mannpincher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பதிவுகளை மேற்கொள்ளவும் தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (90774)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட லான்சர் 90 (செல்வ் ஸ்ராட் மொடல்) மோட்டார் சைக்கிளும், றலி சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.**34/7**, செட்டித்தெரு, நல்லூர். (90767)

## தபால்மூலம் பிரத்தியேக வகுப்புகள்

வகுப்பு 9 தொடக்கம் 11 வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அனுபவ ஆசிரியரால் தனிப்பட்ட ரீதியாகவோ, குழுக்களாகவோ, ரியூசன் நிலையங்களுக்கு வந்தோ கற்பிக்கப்படும். தபால்மூலம் கற்க விரும்புவோரும் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1345, மே/பா உதயன். (90563)

## விற்பனைக்கு

பழைய வீட்டுடன் ஓடுகள், மரங்கள், தீராந்திகள், கொங்கிறீற் கற்கள், கதவுகள், யன்னல்கள், இரும்பு இரட்டைக் கேற், தளபாடங்கள் விற்பனைக்குண்டு. இ.ஈஸ்வரகுமாரன், இல.18/1(4), ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம். (90799)

நல்ல நிலையிலுள்ள மேசைப் பட்டடை, மரக்கடைச்சல் பட்டடை (உள்ளூர் உற்பத்தி) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 210,அரசடி வீதி, கந்தர்மடம்சந்தி, யாழ்ப்பாணம். (90796)

ஒரு நாள் பிறிமா வெள்ளை பேடு, புறொயிலர் குஞ்சுகள், GOld fish, டைகர் பப் ஸ்காப் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருஷ்ணா (பாம் வளவு), மானிப்பாய். (90713)

சொனி T.V. (2020),20" விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.25, சிவன் புது வீதி, நல்லூர். (90781)

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. ஜாதகத்துடனும் புகைப்படத்துடனும் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, இல.178, நாவலர் வீதி. (90801)


## கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய

## வைரவிழா - 2001



இடம் :- நிலைய முன்றல்
காலம் :- இன்று (04.08.2001) சனிக்கிழமை
நேரம் :- பி.ப. 2.30 மணி (இ.நே.)

❖ வைரவிழா ஞாபகார்த்த பஸ்தரிப்பு நிலையத் திறப்பு விழா

*இறைவணக்கம்*
செல்வி மனோஜா ஜெயரட்ணசிங்கம்.

*வரவேற்புரை*
செல்வன் வேலாயுதம் சுரேஸ்குமார் *(நிலையப் பொருளாளர்)*

*ஆசியுரை*
சிவஸ்ரீ ச.சந்தனக்குருக்கள்.
*(கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பிரதமகுரு)*

*தலைமையுரை*
செல்வன் நடராஜா ஐங்கரன்
*(நிலையத் தலைவர்)*

*பிரதம விருந்தினர்*
திரு. க.மணிபல்லவராஜன் *(தலைவர், நல்லூர் பிரதேசசபை)*

*கௌரவ விருந்தினர்*
திரு.வேதநாயகன் *(பிரதேச செயலர், நல்லூர்)*

*சிறப்பு விருந்தினர்*
திரு. செ. செல்வரட்ணம் *(செயலாளர், நல்லூர் பிரதேச சபை)*
திரு. ச. மாதவகுமாரன் *(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயம் II)*
திரு. எஸ். பத்மநாதன் *(அதிபர், நாமகள் வித்தியாசாலை)*
திருமதி சி. மன்மதராஜன் *(சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்)*
செல்வி மார்க்கண்டு *(அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)*
திரு. கு. சாந்தமோகன் *(கிராம அலுவலர், கொக்குவில் மத்தி, கிழக்கு, J/126)*

நூல் வெளியீடு - வைரமலர்
முதற்பிரதி பெறுபவர்:- கோ.சி.வேலாயுதம் *(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)*
சமய அறிவுப்போட்டி பரிசில் வழங்கல்
நன்றியுரை :- செல்வன சிவகுமார் அஜித்தன் *(நிலையச் செயலாளர்)*

*கலை நிகழ்ச்சிகள்*
1. வயலின் கச்சேரி:- செல்வி ஜெயரட்ணசிங்கம் மனோஜா
2. பட்டிமன்றம்:- "இன்றைய சமுதாயத்திற்கு பெரிதும் வழிகாட்டும் இதிகாசம்

| கம்பனின் இராமாயணமே | வில்லியின் பாரதமே" |
|---|---|
| செல்வன் த. கருணாகரன் | செல்வன் எஸ். செந்தூர்ச்செல்வன் |
| செல்வன் ஆர். லெபனான் | செல்வன் எஸ். சிறீதரன் |
| செல்வன் ந. ஐங்கரன் | செல்வன் க. தயாபரன் |

நடுவர் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)
3. ஆனந்த கானங்களை அள்ளி வழங்கும் யாழ் நகரின் முன்னணி "ஆனந்த் இசைக்குழுவின்" இசை நிகழ்ச்சி
ஒலி, ஒளி அமைப்பு:- ஆனந்தன் சவுண்ட் சேவிஸ்

❖ மனோன்மணி சனசமூக நிலைய வைரவிழாவினைக் கண்டுகளிக்க அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்.

*குறிப்பு:-* கொக்குவில் கிழக்குப் பகுதிக்கு மாத்திரம் ஊரடங்குச்சட்டம் இன்று மட்டும் தளர்த்தப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம்,
*மனோன்மணி சனசமூக நிலையம், கொக்குவில் கிழக்கு.* (90812)


## மரக்கன்றுகள் விற்பனை

நல்ல இன தேசி, கமுகு, குறோட்டன், றோஸ், செவ்வரத்தை மற்றும் பூ மரககன்றுகள், Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (90773)

## தவறிவிட்டது

சிவபாதம் பிரசாந்தியுடைய விசேட அ.அட்டை (இல.0902031410) தட்டாதெருவுக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருண் தொலைத் தொடர்பகம், 64,K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். T.P.2717. (90783)

## வீடு தேவை

இருவர் வசிப்பதற்கு வீடு தேவை. முற்பணம், வாடகை வழங்கப்படும். அனெக்ஸ்சாக இருந்தாலும் ஏற்கப்படும். முழுவிவரங்களையும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1346, மே.பா. உதயன, யாழ்ப்பாணம். (90726)

## A/L பொருளியல்

நாணயமாற்றுவீதம், நடைமுறை விடயங்கள் வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வ தேச வர்த்தகம் போன்ற நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே. கருணாகரன். (90720)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மற்றும் புறொயிலர் கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். Broiler 1kg - 150/=, தொடர்பு:- றாஜீவ் ஆனைக் கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (90800)

## விற்பனைக்கு உண்டு

புதிய GEMSONIC Model No. XQ 881 Made in Japan Double Cassette Recorder Tape (Stereo) SONY டெக் Model No. XA 17 - ME விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.நந்தசீலன், டச் வீதி, (பிப்பிலி சந்தி அருகில்) மானிப்பாய். (90797)

ஐந்துநாள் நிரம்பிய நல்ல இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே.வி.சாமி 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் (90762)

## பிறிமா குஞ்சுகள்

பிறிமா, சமிரா இன புறொயிலர் குஞ்சுகள், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. தொடர்பு:- வை.சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது 'கிளின் சொட்' பின்புறம் மின்சார நிலைய வீதி, யாழ்.பஸ்நிலையம். (90807)

## இசை வகுப்புகள்

எமது நியூ ரிதம்ஸ் இசை மன்றில் ஓகன், கிற்றார், ஹார்மோனியம், மெலோடிக்கா புதிய பிரிவு வகுப்புகள். ஞாயிறு (05-08-2001) 3.00p.m. ஆரம்பமாகின்றது. R.கீதன், 691, ஸ்ரேசன் றோட், கோண்டாவில். (90785)

## தீ மிதிப்பில் ஐவர் காயம்

கதிர்காமத்தில் வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்ற தீ மிதிப்பு வைபவத்தில் ஐவர் காயமடைந்தனர்.

362 பக்தர்கள் தீ மிதிப்பு வைபவத்தில் கலந்துகொண்டனர். காயமடைந்த ஒருவர் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி முகாமில் சிகிச்சை பெற்றனர். மாணிக்க கங்கையில் நீமட்டம் உயர்ந்திருக்கின்றது. அடியார்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. (ஐ)

## யுத்தத்தை....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் இந்த நிலைமைக்குப் பொறுப்பானவர்கள் இராஜினாமாச் செய்யவேண்டும்.

*கேள்வி:-* நீங்கள் விமானப் படைத் தளபதியாக இருந்தால் பதவியை விட்டு விலகுவீர்களா?

**பதில்:-** எனது கைகளில் பொறுப்புகள் தரப்பட்டிருப்பின் நிச்சயமாகப் பதவியை விட்டு விலகுவேன். என்னால் நிறைவேற்ற முடியாத பொறுப்புகளை ஏற்று அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்ற பொறுப்பை நான் பொறுப்பேற்கமாட்டேன்.


## லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி

## பொதுக்கூட்டம்

மேற்படி கல்லூரியின் பவளவிழா தொடர்பாக ஓர் ஆலோசனைக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நாளை (05.08.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆளுநர்சபை உறுப்பினர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள், D.A.M. பட்டதாரி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரை கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

*127,ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (90816)

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
*தலைவர் - ஆளுநர் சபை.*


## 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்
05
06
1936

மறைவு
03
07
2001

### அமரர் வயித்திலிங்கம் சோதிலிங்கம்

*கண்மூடி விழிக்கு முன்னர் காலன் உம்மை கவர்ந்ததேனோ? எம்முடனிருந்து மகிழவந்து ஏன் பிரிந்தீர்? எமை விட்டு ஓவென்று நாம் கதறியழ ஓடி மறைந்தீரே ஓர் நொடியில் ஓராயிரம் ஆண்டு ஆனாலும் ஆறாது எம்துயரம்.*

*மூளாய் கிழக்கு,*
*மூளாய்.* (90811)

*என்றும் உம் நினைவுடன் வாழும்:*
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை

கரவெட்டி, கப்புதூவைச் சேர்ந்த திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை (01.08.2001) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், நவநீதகிருஷ்ணன், நற்குணராஜா, பரமேஸ்வரன், ஈஸ்வரி, பராசக்தி, கமலாதேவி, மிமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், மேகலாதேவி, வசந்தி, இரஞ்சினிதேவி, மயில்வாகனம், சுப்பையா, விமலநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.08.2001 வியாழக்கிழமை நடைபெறவிருந்தன. தவிர்க்கமுடியாத காரணத்தால் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2001) சனிக்கிழமை காலை பத்து மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.பரமேஸ்வரன (ஆசிரியர்),
*(மகன்)*
யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்)

*கப்புதூ,*
*கரவெட்டி.*

### சரவணை நாகலிங்கம்

*(சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்)*

இருபாலை, கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாக கொண்டவருமான சரவணை நாகலிங்கம் (01.08.2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), பவளமலர் (கொழும்பு), சுகிர்தமலர் (பிரான்ஸ்), சந்திரகுமார் (ஜேர்மனி), நந்தகுமார் (ஜேர்மனி), ஜெயக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி, வரதராஜா, கதிர்காமநாதன், சித்திரா, சுகந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபானு, கயானு, கனாதிபன், அபிரா, செந்தூரா, தனுஷன், ஆதவன், ஆரணி, கிருஷாணி, கௌதமன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (04.08.2001) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.சிவநேசன்.
*(மருமகன்)* (90803)

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.*

# பெண்களுக்கான கராத்தே பயிற்சி வகுப்பு



P.ராஜன் மாஸ்ரரின் மாணவி

ஆசிரியர் : செல்வி ம.கேமமாலினி
காலம் : திங்கள், வியாழன்
நேரம் : 5.00 மணி (பு.நேரம்)
தொடர்பு : P.ராஜன் மாஸ்ரர், கேணியடி லேன், (தனுஸ் ஸ்ருடியோ அருகில்) கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(90821)

# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

தெல்லிப்பழை கிழக்கு குருநாதசுவாமி கோயில் புனரமைப்புத் திருப் பணிக்கு மூன்று லட்சத்தை ஒதுக்கீடு செய்து, அதில் ஒரு லட்சத்தை உடன் தந்துதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல்
இந்து கலாசார அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகமுமான
மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புக்குரிய

**திரு.ச.சிவதாசன்**

அவர்களையும்

இந்நிதி ஒதுக்கீட்டுக்கு உறுதுணையாக இருந்த வலி.வடக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்

**திரு. நா.பத்மநாதன்** அவர்களையும்

மனதாரப் பாராட்டி உளமார வாழ்த்துகின்றோம்.

தெல்லிப்பழை. (90818) - திருப்பணிச்சபை.

"விஸ்வப் பிரம்மனே நம"

# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 21 - 11 - 1929



உதிர்வு 05 - 07 - 2001

## அமரர் சின்னக்குட்டி இராசப்பு

(கோப்பாய் காளி கோயிலடி)
(ஓய்வுபெற்ற புகையிரத ஓவசியர்)

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எமை வளர்த்து
தேசம் புகழவைத்த
அன்புத் தெய்வத்துக்கு எமது அஞ்சலிகள்.

எமது தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலிகள் தெரிவித்தவர்களுக்கும், எமக்குப் பல்வேறு விதத்தில் உதவிகள் செய்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (04.08.2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி கனகம்மா (மனைவி),
மக்கள்: ரங்கநாதன், ரகுநாதன்,
பேரப்பிள்ளைகள்.

காளி கோயிலடி,
ராணி மில் ஒழுங்கை,
நெல்லியடி. (90820)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.4

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதிப்பஜனையும் தொடர்ந்து காலை 8 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் விசேடபூஜை ஆராதனை வழிபாடுகளின் பின்னர் கந்தபுராண படனமும் இடம்பெறும்.

நண்பகல் மாகேஸ்வர பூஜையை அடுத்து பிற்பகல் 3 மணிக்கு 'கந்த புராணம்' புராணப்படிப்பு இடம்பெறும். (க-3)

★ ★ ★

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6 மணிக்கு ஞானகுமாரி சிவநேசனின் பாட்டுக் கச்சேரி பக்க வாத்தியம் சகிதம் இடம்பெறும்(க-3-86)

★ ★ ★

அகில இலங்கை கம்பன் கழகம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு செஞ்சொற் செல்வா இரா.செல்வவடிவேலின் கந்த புராண உரை இடம்பெறும்.(க-3-86)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 5.15 மணிக்கு இடம்பெறும் கம்பராமாயண தொடர் விரிவுரையில் கானகதாவாரிதி சிவ. வைத்தியானந்த சர்மா ஸ்ரீராமாவதாரம் என்னும் தலைப்பில் இசைச் செற்பொழிவு நிகழ்த்துவார். (க-3)

## நாளை சைக்கிள் ஓட்டப்போட்டி

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை [illegible] மணிக்கு நல்லூர் பிரதேச சபை [illegible] அலுவலகத்தின் முன்னால் இருந்து ஆரம்பமாகவுள்ளது.(க-86)

## திருமறைக் கலாமன்ற கலையகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின புதிய கலையகம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நிலைய இயக்குநர் பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளால் திறந்து வைக்கப் படவுள்ளது.

இல.15, றக்கா வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கலையகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5.15மணிக்கு 'அடக்கம் செய்யப் பட்ட கனவுகள்' என்ற கருப்பொருளில் ம.சாம்பிரதீபன் தனது கவிதை அனுபவத்தைப் பகிரவுள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு செல்வி றஜித்தா பிறேமலதா தனது வெளிநாட்டுக் கலைப்பயண அனுபவத்தைப் பகிரவுள்ளார். மறுநாள் புதன கிழமை மாலை 5.15 மணிக்கு பேராசிரியர் நீமரியசேவியர் அடிகள் தலைமைத்துவக் கருத்தரங்கை நிகழ்த்தவுள்ளார். (ஐ-6)

**லஷ்சுமி இணுவில்**
M.G.R., லதா, நாகேஷ் மற்றும் பலர் நடிப்பில்
**உரிமைக்குரல்**
தினசரி 10.30, 2.00, 5.00
(90824)

**ராஜா யாழ்ப்பாணம்**
இளையதளபதி விஜய், தேவயானி, சூர்யா, வடிவேலு மற்றும் பலர் நடிப்பில
**ப்ரண்ட்ஸ்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17443)

**நாகம்ஸ் சுன்னாகம்**
அஜித் (மாறுபட்ட 7வேடங்களில்) வசுந்தராதாஸ், மீனா நடித்த
**சிட்டிசன்**
(ரீல்ஸ்) (90657)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

# நூல் அறிமுக விழா

## "இசைநாடகக் கலைக் குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம்"

(ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்)

தலைவர் : கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான் - பிரதேச செயலர், வலி.மேற்கு)
இடம் : யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபம்
காலம் : நாளை (05.08.2001) ஞாயிறு காலை 10 மணி
வெளியீட்டுரை: திரு.செ.மெட்ராஸ் மெயில் (பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழகம்)
மதிப்புரை : மூதறிஞர் க.சொக்கலிங்கம் M.A.
ஆசியுரை : கலாபூஷணம் ஏ.ரி.பொன்னுத்துரை
திரு.த.உருத்திரேஸ்வரன் B.A.
திரு.செ.சதானந்தன் (அதிபர், கரணவாய் த.க.வி.)
திரு.நா.இராமலிங்கம் (சமாதான நீதிவான்)
திரு.எஸ்.ரி.கணநாதன் (மின் அத்தியட்சகர்)
கலாபூஷணம் வி.கே.பாலசிங்கம்
திரு.த.பு.தஜிதரன் (கிராமசேவை உத்தியோகத்தர் J/91)
சிறப்புரை : திரு.த.பஞ்சலிங்கம் (சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், தமிழாசிரியர் சங்கம்)
திருமதி மீரா அருள்நேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
திரு.வி.கணேசலிங்கம் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ஆ.இராஜகோபால் (செம்பியன்செல்வன் - கல்வி அதிகாரி, யாழ்.கல்வி வலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அரியாலை,
யாழ்ப்பாணம். (90810) - விழாக்குழு

உ

## திரு நல்லூர் முருகன் பிள்ளைத் தமிழ் நூல் வெளியீட்டு விழா

நாள் : 05.08.2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி (பழைய நேரம்)
இடம் : நல்லை ஆதீனம்
தலைவர் : பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா (தலைவர் - தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர் தேரடி அடியார்கள்.

(90823)

# பரிசுத்த ஆவிக்கு செபம்

இச்செபத்தின் மூலம் பெற்ற நன்மைகளுக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

அருள் பெற்ற அடியார்.
A.W.A.

(C/17702)

# மரண அறிவித்தல்கள்

## ஆ.தாமோதரம்பிள்ளை

நெல்லியடியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் தாமோதரம்பிள்ளை நேற்று (03.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும் கெங்காதரன், பாலகெங்காதரன் (சிங்கப்பூர்), மீனாம்பிகை (மலேசியா), நீலாம்பிகை (ஆஸ்திரேலியா), கனகாம்பிகை (ஆசிரியை, நெல்லியடி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விக்னராஜா (மருமகன்)

நெல்லியடி. (90815)

## வினாசித்தம்பி பாலசுந்தரம்

(இளைப்பாறிய கிராம சேவையாளர், அம்பன்)

அம்பனைச் சேர்ந்த வினாசித்தம்பி பாலசுந்தரம் (இளைப்பாறிய கிராம சேவையாளர் - பருத்தித்துறை, புலோலி கிழக்கு, அம்பன், குடத்தனை, நாகர்கோயில்) கடந்த 26.07.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அம்பனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.சிவகுமாரன் (இலங்கை வங்கி - நெல்லியடி),
ச.விஜயகுமார் (உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்ப்பாணம்),
நா.சிவநேசன் (தபாற்கந்தோர் - பருத்தித்துறை)
(மருமக்கள்)

அம்பன்,
குடத்தனை.
(90808)

## புதிய காப்பரண்கள், இலத்திரனியல் சாதன வேலிகள்!

# கட்டுநாயக்கா விமானத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு,ஒக.4

கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து விமானத் தளத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் புதிதாக பாதுகாப்பரண்களும் இலத்திரனியல் சாதனங்களுடனான இரட்டைக் கம்பி வேலிகளும் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் விமான நிலையப் பாதுகாப்புக்கென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் சிபார்சின் பேரில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலையத்தில் மூடிய சுற்று தொலைக்காட்சியமைப்பும் எக்ஸ் - கதிர் இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

பார்வையிலிருந்து இலகுவில் மறைந்துவிடக் கூடிய எல்லைப் பகுதியில் காவல் கோபுரங்களை அமைப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை வளரும் பற்றைகள், செடிகளை குறுகிய இடைவெளிகளில் வெட்டித் துப்புரவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களைச் சோதனை செய்யவென தனியான வலயம் ஒன்றை உருவாக்குவது என்றும் -

விமான நிலையத்தில் அடிக்கடி பாவிக்கப்படும் பகுதியைச் சுற்றி தனியான பாதுகாப்பு வேலி ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் -

எதிர்பாராதவகையில் இடம் பெறும் சம்பவங்களை முறியடிப்பதற்கென தற்போது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள விமானக் கடத்தல் முறியடிப்புப் பிரிவுக்கு மேலதிகமாக முழுப் பயற்சி பெற்ற துரித செயற்பாட்டுப் பிரிவு ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் -

கட்டுநாயக்கா பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட குழு சிபார்சு செய்துள்ளது - இப்படி அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-7)

## அரசமைப்பு மாற்றம் குறித்த

# ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவு

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசமைப்பை மாற்றுவதென்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குவதென மக்கள் ஐக்கிய முன்னணி முடிவுசெய்துள்ளது.

முன்னணியின் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனா தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னணியின் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கட்சியின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் அதேசமயம், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்படுவது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வஜன வாக்கெடுப்பை அடுத்து புதிய அரசமைப்பைத் தயாரிப்பது என்றும் -

ஏற்கனவே பிரேரிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கைவிடுவது என்றும் -

அரசு உறுதிமொழி அளித்ததை அடுத்தே இந்த முடிவைத் தாங்கள் எடுத்திருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்படும் உறவுகள் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் -

ஐ.தே.கட்சியுடன் தமிழ்க் கட்சிகள் இணைந்து செயற்படுவது அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துகிறது என்றும் - அவர் மேலும் சொன்னார்.

## ஜி.சீ.ஈ. பரீட்சைக்குத் தோற்றும்

# குடாநாட்டு மாணவர்களுக்கு அமைச்சரின் வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம்,ஒக.4

இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் குடாநாட்டு மாணவர்களுக்கு நல்வாழ்த்துக்களை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் என்று ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருககும் மாணவ, மாணவியருக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். தமிழ் மக்கள் கல்வியை பெரும் சொத்தாக தலைமுறை தலைமுறையாக பேணிக் காத்து வருகின்றனர். எனவே உயர்தரப் பரீட்சையில் தோற்றி சித்தியடைவதன் மூலம் பட்டப்படிப்பு எனும் பல்கலைக்கழக சூழல் கல்வியைத் தொடர வாழ்த்துகின்றேன்.

சமுதாயத்தை மாற்றியமைக்கும் சக்திமிக்கவர்களான நீங்கள், நிதானமாக எதிர்காலத்தில் அடியெடுத்து வைத்து இம்மண்ணிற்கு பெருமை சேர்ப்பீர்களென நம்புகின்றேன். உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதுடன் சித்தியடைந்து எதிர்காலச் சந்ததிககு வழிகாட்ட வேண்டுமென்று உங்களை உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன் - என்றுள்ளது. (க-3)

### துறைமுகத்தில் வேலைநிறுத்தம் தொடர்கிறது

கொழும்புத் துறைமுகத்தின் ஜெயா இறங்குதுறையில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமான வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றும் நீடித்ததாக அறிவிக்கப்பட்டது. (க)

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பேச்சுக்களைத் தொடரப் போகின்றோம் - என்றார்.

இலங்கை முழுவதும் வாழும் நான்கு லட்சம் மலையக வம்சாவழி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என்றும் -

அந்த மக்கள் தமது 16 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடியதாக அவர்களுக்கு 16 தொகுதிகள் பிரித்தொதுக்கப்பட வேண்டும் என்றும் -

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அரசுக்கு நிபந்தனைகள் விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இலங்கை விடயங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்காத் தாக்குதலை இந்தியா கண்டிக்கவில்லை. மாறாக, தன்னிடம் விடுக்கப்பட்ட வினா ஒன்றுக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர், கட்டுநாயக்காத் தாக்குதலை ஜூன் 30 ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலுடன் தொடர்புபடுத்திக் கருத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் வன்முறைக்கும் பயங்கரவாதத்துக்கும் இடமேயில்லை" என்று அவர் திரும்பவும் வலியுறுத்தினார்.

கடந்த வருடம் ஒக்ரோபருக்குப் பின்னர் புலிகளின் பயகரவாதத் தாக்குதல்கள் இடம்பெறாததைத் தனது கவனத்தில் கொண்டுள்ள இந்தியா, அதனடிப்படையில் -

யாழ்குடாநாட்டின் மீது விமானக் குண்டுவீச்சு நடத்துவதற்கு இலங்கை அரசு முந்திக்கொண்டு உத்தரவு கொடுக்காமல் இருந்திருந்தால் கட்டுநாயக்காத் தாக்குதல் இடம்பெற்றே இருக்காது என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாகத் தோன்றுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவம் ஒன்றுக்கு - ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருட காலத்தில் - இந்தியா கண்டனம் தெரிவிக்காமல் இருப்பது இது தான் முதல் தடவை ஆகும். மாறாக, இதற்கு இலங்கை அரசையும் பொறுப்பாக்கும் கருத்தை இந்தியா வெளியிட்டிருக்கின்றது.

விமானத் தாக்குதல்கள் தொடர்பாகக் கடும் நிலைப்பாட்டை எடுத்துள்ள இந்தியா, அது ஏமாற்றம் தரும் நிகழ்வு என்று வர்ணித்துள்ளது. அதேசமயம் "சமாதானத்துக்கு மாற்றீடு ஏதும் கிடையாது" என்பதையும் ஸ்ரீலங்காவுக்கு அது மீண்டும் நினைவூட்டியிருக்கின்றது.

"சமாதானத்துக்கான யுத்தம்" என்ற ஸ்ரீ லங்கா அரசின் நிலைப்பாட்டுடன் இந்தியா இனியும் ஒத்துப் போகாது என்பதும் -

புலிகளுடன் பேச்சு நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் -

இந்தியத் தரப்பால் இலங்கைக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இந்திய அரசின் இந்தப் போக்கு மாற்றம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை எப்படிப் பாதிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டுக்குத் தன்னுடைய ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் உரிமை உண்டு என்ற அடிப்படையில் விமானத் தாக்குதல்களை நியாயப்படுத்தும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விமானத் தாக்குதல்கள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு "ஏற்றுக்கொள்ள முடியாதது; யதார்த்தமற்றது" என்று கண்டித்துள்ளார்.

விமானத்தளம் மீதான தாக்குதலை அடுத்து, அந்தத் தாக்குதலைக் கண்டித்த அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா மற்றும் ஏனைய நாடுகளுக்கு ஜனாதிபதி குமாரதுங்க மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் நன்றி தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாகக் கருத்துக் கூறிய குமாரதுங்க "புலிகளுக்கு தடை விதித்த நாடுகள், தாங்கள் எவ்வளவு தூரம் சரியாகச் செயற்பட்டிருக்கிறோம் என்பதை இப்போது உணர்ந்திருப்பார்கள்" என்று கூறியிருப்பது திறந்த விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

புலிகளுடன் பேசும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு இந்தியா இப்போது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளது என்பதைக் காட்டும் வேறு சமிக்ஞைகளும் வெளியாகியிருக்கின்றன.

இலங்கைக்கு ஏற்கனவே விற்பனை செய்த கரையோர ரோந்துக் கப்பலுக்குரிய - மூன்று 'சேட்டக்' ரக வான் கண்காணிப்புக் ஹெலிக்கொப்டர்கள் உட்பட - எந்த ஆயுதத் தளபாடங்களையோ, போர் தொடர்பான கருவிகளையோ இனிமேல் விற்பனை செய்வதில்லை என்று புதுடில்லி முடிவு செய்துவிட்டது.

கரையோர ரோந்துக்கான 'சுகன்யா' கப்பலை இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்ததால் உள்நாட்டில் 'வாங்கிக் கட்டிக்கொண்ட' இலங்கைக் கடற்படை இந்த ரகத்தில் அடுத்த கப்பலைக் கொள்வனவு செய்வதில்லை என்று அறிவித்துள்ளது.

ஆனால் இதற்குப் பலகால முன்னரே -

வடக்குத் தமிழர்களுக்கு ஒரு மாற்றுத் தலைமைத்துவத்தை உருவாக்கும் குமாரதுங்கவின் முயற்சிக்கு இணங்காத ஒரு நிலைப்பாட்டை - முன்னரைப் போலல்லாது இப்போது - இந்தியா எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

- இப்படி 'த இந்து' மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

### மற்றொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்சமாக இருக்கலாம். ஆனால் இரு தரப்புமே நிலப்பிரதேசத்தைத் தக்கவைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. எனினும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் சிரத்தையாக உள்ளன" - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எனவே இராணுவத்தின் புதிய உத்தி, ஜன சஞ்சாரமற்ற பெரிய நிலப்பிரதேசத்தைப் பிடிப்பதாக அல்லாமல மக்கள் குடியிருப்புப் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. (உ)

### அவசரகாலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிகளின் கீழ் சந்தேகநபர்களைத் தடுத்து வைத்திருந்தது சட்டவிரோதமானது என்றும் -

பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் 40இன் கீழ் - அவசரகாலச் சட்டத்தின்கீழ் - தடுத்துவைக்கப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டதில் இருந்து 15 நாள்களுக்குள் பிணையில் விடுவிக்கப்படவேண்டும். அல்லது பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக்காவல் உத்தரவைப் பெறவேண்டும் என்றும்-

இது தவறின் சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்செய்து நீதிவான் ஒருவரிடம் தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் கூறி வாதிட்டார்.

இதனையடுத்து நீதிபதி 4.7.2001 முதல் 19.7.2001 வரையிலான காலப் பகுதியில் மேற்படி சந்தேக நபர்கள் 21 பேரும் எந்தச் சட்டத்தின்கீழ், யாருடைய உத்தரவின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் -

இதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும்-

குற்றத்தடுப்புப் பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்தார். (க-7)


பாதுகாவலன் பத்திரிகையின்

125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும்

இடம் :- யாழ். மறைக்கல்வி நிலையம்
காலம் :- இன்று (04.08.2001) சனிக்கிழமை
முற்பகல் 9.30 மணி (புதியநேரம்)
முதற்பிரதி வெளியீடு :- தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை (யாழ். ஆயர்)
ஆய்வுரை :- எஸ்.ஜெபநேசன் ஆண்டகை (தென்னிந்தியத் திருச்சபை ஆயர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(C/17705) பாதுகாவலன் ஆசிரியர்.



சுந்தர் வெளியீடு

இல.38, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

தரம் 5 புலமைப்பரிசில் - இறுதிப்பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| தனியார் கல்வி நிலையங்கள் | 05.08.2001 | ஞாயிறு | 3.30 p.m. |
| பாடசாலைகள் | 07.08.2001 | செவ்வாய் | 9.00 a.m. |


தனிப்பட்டோர், புத்தகசாலைகளில் எதிர்வரும் புதன்கிழமை முதல் மேற்படி வினாத்தாளையும் அவசிய குறிப்புகள் அடங்கிய வழி காட்டி நூலையும் பெற்றுக்கொள்ளலாம். (90826) - சுந்தர்.



புதிதாகப் புனரமைக்கப்பட்டுள்ள

சின்னமடு

மரியன்னை யாத்திரைத் தல திருநாள்



இன்று (04.08.2001) - சனிக்கிழமை
மாலை 5மணி - நற்கருணைவிழா
05.08.2001 - ஞாயிற்றுக்கிழமை
முதல் திருப்பலி: காலை 6 மணி
காலை 9.30 மணி: ஆயர் பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலி.

குறிப்பு: யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் சனி பிற்பகலிலும் ஞாயிறு காலை 6 மணியிலிருந்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாத்திரைத்தலம், சின்னமடு. (90822) அருட்திரு.எரிக் றோசான், பரிபாலகர்.



கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

பொருளியல்II

பணம், வங்கி, விலைமட்டம்
2002 A/L பி.ப. 2.30
2003 A/L பி.ப. 4.00
(90819)

யாழ்.S.வரதராஜன்

ஆரம்பம்: 06.08.2001 (திங்கள்)



A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு !!!

உங்கள் அனைவருக்கும் IBMS கணனி நிறுவனம் தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



பரீட்சைக்குப் பின்

நீங்கள் .........

உங்கள் எதிர்காலக் கணனிக் கல்விக்கு வழிகாட்ட IBMS தயாராகிவிட்டது.

IBMS ☑ IT EDUCATION FOR THE NEW GENERATION

IBMS

Head Office : IBMS, No.701 K.K.S Road, Jaffna.
Phone: 021-3165

Branches: Nelliyady. Chankanai


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.